விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT


# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 23 வெள்ளிக்கிழமை (07.03.2003) தொலைபேசி- 2223378 ஒலி 78


## சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் களுத்துறைக் கைதிகளின் உடல்நிலை கவலைக்கிடம்

### பேணாட் குணதிலகா இன்று பார்வையிடுவார்

(நமது நிருபர்)

**களுத்துறைச் சிறைச்சாலையில் சாகும் வரையில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளில் 24 பேரின்நிலை கவலைக்கிடமாக உள்ளது இதில்13 பேர் இரத்த வாந்தி எடுத்த நிலையில் இருப்பதாகவும் ஒருவர் மயக்கமடைந்த நிலையில் நுகேகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகால தடைச்சட்டம் என்பவற்றின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாகச் சிறைவாசம் அனுபவித்து வரும் தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுவிக்குமாறு கோரி அல்லது வழக்கு தாக்கல் செய்யுமாறு கோரி களுத்துறைச் சிறையில் கடந்த ஆறுநாட்களாக சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் 87 தமிழ் அரசியல் கைதிகளின் நிலை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி நேற்றுக் காலை களுத்துறைச் சிறைச்சாலைக்கு சென்று உண்ணாவிரதிகளை பார்வையிட்டு உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கோரிய போதும் உண்ணாவிரதத்தை கைவிட அவர்கள் மறுத்து விட்டார்கள்.

சாகும் வரையிலான உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளில் ஒருவரான ரகுபதி சர்மா என்பவர் மயக்க நிலையில் இருப்பதாகவும், இதே வேளை உண்ணாவிரதிகளில் ஒருவர் நுகேகொட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் தமிழ் அரசியல் கைதிகளின் நிலை நாளுக்கு நாள் படுமோசமடைந்து வருவதையடுத்து மன்னார் ஆயர் வணக்கத்திற்குரிய இரா.ஜோசப் இலங்கை அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் பேணாட்

(10ம் பக்கம் பார்க்க)

## கச்சதீவுக்கு நாளை படகுச்சேவை

(நெடுந்தீவு)

கச்சைதீவு புனித அந்தோனியார் பெருவிழாவுக்குச் செல்லும் பக்தர்களின் வசதிகருதி நாளை அதிகாலை முதல் படகுப் போக்குவரத்து வசதிகள் செய்யப் பட்டுள்ளது.

நெடுந்தீவு மகாவலி துறைமுகம் மற்றும் குறிகட்டுவான் இறங்கு துறை ஆகிய இடங்களில் இருந்து நாளை அதிகாலை முதல் இப் படகுப் போக்குவரத்துகள் இடம் பெறவுள்ளது. (த-48)

## விசேட பொலிஸ் குழு வெளியேறியது

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் இருந்து ஈ.பி.டி.பியினரை வெளியேற்றக் கோரி பொதுமக்கள் நடத்திய எதிர்ப்புப் போராட்டத்தின்போது ஈ.பி.டி.பியினருக்கு பாதுகாப்பு வழங்க நியமிக்கப்பட்ட விசேட பொலிஸ் குழு நேற்று மாலை அங்கிருந்து முற்றாக வெளியேறியுள்ளது.

(த-117)

## தமிழக மீனவர்கள் 93 பேர் இராமேஸ்வரம் சென்றனர்

(இராமேஸ்வரம்)

மன்னார் மீனவர்களால் பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களில் 93 பேர் நேற்று மாலை இந்திய கடலோரக் காவல்படையினரின் கப்பல் மூலம் இராமேஸ்வரம் சென்றடைந்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை மன்னார் கடலில் தமிழக மீனவர்களுக்கும் மன்னார் மீனவர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதல்களை அடுத்து நேற்று 93 மீனவர்கள் விடுவிக்கப்பட்ட நிலையில் 3வது நாளாகவும் இராமேஸ்வரம் பகுதியில் பதற்றம் நிலவியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை தமிழக மீனவர் சார்பாக நடத்தவிருந்த மறியல் போராட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜெயக்குமாருடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து கைவிடப்பட்டுள்ளது.

(வ)

## இன்று ஆ. அபி. வங்கியின் குழு புலிகளை சந்திக்கும்

(கிளிநொச்சி)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ரடோ தலைமையிலான குழுவினர், இன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள அரசியல் துறை நடுவப்பணியகத்தில் நடைபெறவுள்ள இச் சந்திப்பில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி கூனியும் கலந்து கொள்ளவுள்ளார்.

வன்னிப் புனரமைப்புக் குறித்து பார்வையிடவுள்ள இக் குழுவினர், கிளிநொச்சி வைத்தியசாலைக்கான அடிக்கல்லையும் இன்று முற்பகல் 10.45 மணிக்கு நாட்டி வைக்கவுள்ளனர்.

(இ)

## முல்லைத்தீவு மீனவர்கள் மீது டோறாப் படகு தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் மீனவர்களின் படகு மீது இலங்கை கடற்படையினரின் டோராப்படகுகள் தாக்குதல் நடத்தியுள்ளன.

நேற்று அதிகாலை 4 மணியளவில் மீன்பிடிப்பதற்கு மூன்று மீனவர்களுடன் சென்ற படகு மீளக் கரைக்கு திரும்பாததை அடுத்து மாலை 4 மணியளவில் அதனைச் தேடிச் சென்ற படகு மீது இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கரை திரும்பாத படகைத் தேடிச் சென்ற படகும் மீனவர்களும் தாக்குதலில் இருந்து தப்பி கரை சேர்ந்தனர்.

அதிகாலை வேளை மீன்பிடிக்கச் சென்ற படகு மாலை 6 மணிக்கு கரைதிரும்பியது. (த-5)

## யாழ்.வைத்தியசாலைக்கு புதிய சீ.ரி. ஸ்கானர்

### இந்திய அரசு அன்பளிப்பு

(கொழும்பு)

இந்திய அரசாங்கம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு புதிய சீ.ரி. ஸ்கானர் பொறியொன்றை அன்பளிப்பாக வழங்க முன்வந்துள்ளது.

அடுத்த மாதம் இப்பொறி கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் ஊடாக யாழ் வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப் படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உயர் மருத்துவ தொழில் நுட்ப வசதி கொண்ட இப்பொறி 297 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியுடையது.

இதேவேளை மேற்படி ஸ்கானரை இயக்குவது தொடர்பில் நரம்பியல் வைத்திய நிபுணர் டாக்டர் குணானந்தனிடம் தொடர்பு கொள்ளுமாறும் இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

(இ)

## தமிழ்க் கூட்டமைப்பினருடன் பாலசிங்கம் இன்று சந்திப்பு

### சங்கரி கலந்து கொள்ளமாட்டார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களை இன்று வெள்ளிக் கிழமை சந்தித்துப் பேசவுள்ளார்.

இச் சந்திப்பின் போது தமிழ்க் கூட்டமைப்பின் எதிர்கால நடவடிக்கைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து முக்கியமாக ஆராயப்படவுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலாக்கம் தொடர்பான பிரச்சினைகளும் இச் சந்திப்பில் ஆராயப்படும் அதேவேளை இச்

(10ம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவு பரிசோதகர்களாக 37 பேர் இன்று முதல் நியமனம்

(திருகோணமலை)

2001ம் ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் மூலம் 37 பேர்கள் கூட்டுறவுப் பரிசோதகர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 24 பேர் கணக்காய்வுப் பகுதிக்கும் 8பேர் அபிவிருத்திப் பகுதிக்கும் 5பேர் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதிக்கும் இன்று முதல் நியமனம் பெற்றுள்ளனர்.

**கணக்காய்வுப் பகுதி**

ஏ.சீராளன்,கே.ஜெயதாஸ், எஸ்.கமலலோஜினி,பி.சுபாஜினி, ஐ.மகேந்திரன்,ரி.சுபத்திரா,ரி.திருமயூரன்,எஸ்.ரதிகுலன்,கே.தாட்சாயினி

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு வானொலிச் சாதனம் நோர்வேத் தூதுவருக்கு அழைப்பாணை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்திற்கு வானொலி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டமை சட்ட விரோதமானது எனத் தெரிவித்து கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் பிரகாரம் சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், புலிகளின் சமாதான செயலகச் செயலாளர் புலித்தேவன், ஊடகத் துறை அமைச்சின் செயலாளர் ஆகியோரை எதிர்வரும் 31ம் திகதிக்கு முன்னர் மன்றில் ஆஜராகுமாறு கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தேசிய சங்கத்தைச் சேர்ந்த கலாநிதி பியசேனா திசாநாயக்காவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி வழக்கில் வானொலிக்கான அனுமதி வழங்கப்பட்டமை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 44 பிரிவை மீறும் செயல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை வானொலிச் சாதனங்கள் இறக்குமதி செய்யப்பட்டமை வியன்னா கோட்பாட்டிற்கு உட்பட்டது என்று

(10ம் பக்கம் பார்க்க)







# உலகக் கிண்ணப் போட்டிகளிலிருந்து வெளியேறுகிறார் கிலெஸ்பி

அவுஸ்திரேலிய அணியின் வேகப் பந்துவீச்சாளர் பேஸ்மன் கிலெஸ்பி இங்கிலாந்து அணியுடனான போட்டிக்கு முன் ஏற்பட்ட பயிற்சியின் போது ஏற்பட்ட காயத்தினையடுத்து இனி வரும் போட்டிகளில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போது குதிக்காலில் ஏற்பட்ட காயத்தினால் உலகக் கிண்ணப் போட்டிகளில் தொடர்ந்து வரும் ஆட்டங்களில் ஆடக் கூடாதென வைத்தியர்கள் கையை விரித்து விட்டனர் என்றார்.



கிலெஸ்பி தொடர்ந்து கூறுகையில், எனது கிரிக்கெற் வாழ்க்கையில் ஏற்பட்ட காயங்களைப் போல் எந்தவொரு கிரிக்கெற் வீரனுக்கும் இது வரை ஏற்பட்டிருக்காது. கடந்த உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியிலும் முதுகு வலிகாரணமாக நான் பங்கு பற்றவில்லை. அவ்வாறான சம்பவங்கள் நான் அதிஷ்டமற்றவன் என்பதனையே காட்டுகின்றன என்றார்.

இதே வேளை, ஐ.சி.சி இன் 3பேர் அடங்கிய வைத்தியர் குழு கிலெஸ்பியின் உடல்நிலை பற்றி வெளியிட்ட அறிக்கையின் பின்னர், அவுஸ்திரேலிய அணிக்கு வேறொருவரை சேர்த்துக் கொள்வதற்கு ஐ.சி.சி அனுமதி வழங்கியுள்ளது. கிலெஸ்பியின் இடத்தை நிரப்புவதற்காக நாதன் பிரெக்மன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியா அணியின் சுழல் பந்து வீச்சாளர் ஷேன் வோன் ஊக்க மருந்து பாவித்த காரணத்தினால் ஒரு வருட தடை விதிக்கப் பட்டுள்ள இவ் வேளையில், கிலெஸ்பியின் வெளியேற்றம் அவுஸ்திரேலிய அணின்யப் பாதிக்குமா எனச செய்தியாளர்கள் அவுஸ்திரேலிய அணியின் பயிற்றுவிப்பாளரிடம் கேட்டதற்கு எமது அணியினுள் சேர்க்கப்படும் ஒவ்வொரு வீரரும் திறமையானவர்களே ஆகையால் அவ்வாறான நிலை அணிக்கு ஏற்படாது என்று கூறினார்.

(த-55)

## இன்றைய ஆட்டங்கள்

அவுஸ்திரேலியா
எதிர்
இலங்கை
(செஞ்சூரியன்)
2.00 P.M

இந்தியா
எதிர்
கென்யா
(கேப்டவுன்)
6.00 P.M

# சுப்பர் சிக்ஸ்க்கு தகுதி பெறாவிடினும் முத்திரை பதித்தே வெளியேறினோம்

## ஆறுதலடைகிறார் கார்ல் கூப்பர்

உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் சுப்பர் சிக்ஸ்க்கு தகுதி பெறாவிடினும் எமது அணி நிலையான முத்திரை ஒன்றை கென்ய அணிக்கு எதிராக பதித்து விட்டே வெளியேறுகிறது. இவ்வாறு மேற்கிந்திய அணித்தலைவர் கார்ல் கூப்பர் தெரிவித்துள்ளார்

சிறந்த சகலதுறை ஆட்ட வீரரான கூப்பர் கென்யா அணியுடனான போட்டியில் 142 ஓட்டங்களால் பெரு வெற்றியீட்டிய பின்னர் தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் கூறுகையில், எம்முடைய தலைவிதி அப் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னரே தீர்மானிக்கப்பட்டிருந்தாலும், எமது வீரர்கள் மனம் சலிக்காமல் ஆடினர். குறிப்பாக வஸ்பேட்ரேக்ஸ் 5 விக்கெட்டுக்களை இரண்டாவது தடவையாகவும் சரித்து இலங்கை வீரர் சமிந்த வாஸுடன் தன்னை சமப்படுத்திக் கொண்டார். இவ்வாட்டத்தில் லோசன் மிக வேகமாக மணிக்கு 150 கிலோ மீற்றர் என்ற வேகத்தையும் கடந்து அபாரமாக பந்தை வீசினார். ஆயினும் பங்களாதேஷ் அணியுடனான போட்டியில் மழை குறுக்கிட்டதால் சுப்பர் சிக்ஸ்க்குள் நுழைய முடியாத துர்பாக்கிய நிலை தோன்றியது.

(த-55)

# அடுத்த சுற்றுக்கு தகுதி பெறாதது ஏன்?

# பாகிஸ்தான் அணிமீது தீவிர விசாரணை

உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டியில் முதல் சுற்றில் விளையாடிய பாகிஸ்தான் அணி அடுத்த சுற்றுக்கு (சுப்பர் சிக்ஸ்க்கு) தகுதி பெறாமல் போனமைக்கான காரணங்களைக் கண்டறியும் பொருட்டு அவ்வணிமீது தீவிரவிசாரனைகள் மேற்கொள்ளப் படவுள்ளது.

மிகவும் திறமையான பந்துவீச்சு, துடுப்பாட்ட வீரர்களை பாகிஸ்தான் அணி கொண்டிருந்த போதும் அடுத்து சுற்றுக்கு தகுதி பெறாமல் போனமை பாகிஸ்தான் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபையை விசனம் அடைய வைத்துள்ளது.

இதன் எதிரொலியாக போட்டிகளில் கலந்து கொண்டு விட்டு நாடு திரும்பும் அணிவீரர்கள் மீது விசேட விசாரணைக் குழுவொன்று விசாரணைகளை மேற் கொள்ளவுள்ளது.

முன்னாள் பாகிஸ்தானிய ரெஸ்ட் கிரிக்கெற் போட்டியாளரும் தெரிவாளருமான நசாட் அலி உட்பட 3 பேர் கொண்ட குழு இதற்கென நியமிக்கப்பட்டுள்ளது.

1992ல் பாகிஸ்தான் அணி உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டியில் கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

(த-5)



பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர் அக்தர்




இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்துடன்
இணைந்து
வலம்புரி
நடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப்போட்டி

போட்டியில் பங்கு பற்றுங்கள்
பெறுமதியான பரிசை வெற்றி
கொள்ளுங்கள்

1) இம்முறை உலகக்கிண்ணத்தை வெல்லும் அணி எது?
2) இப் போட்டியின் சகலதுறை ஆட்டக்காரர் யார்?

உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி
கிரிக்கெற் பரிசுப் போட்டி
வலம்புரி
இல 15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003
முழுப்பெயர் : ------------------------------
முகவரி : ------------------------------
------------------------------
தே.அ.அ.இல : ------------------------------
கையொப்பம்:------------------------------
அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி
மார்ச் 15, 2003

# சர்வதேச வனப்பிரதேசமாக நக்கிள்ஸ் மலைத்தொடர்

(கொழும்பு)

சர்வதேச வனப்பிரதேசமாக நக்கிளஸ் மலைத்தொடரை பிரகடனப்படுத்தவுள்ளதாகவும், இதனைப் பாதுகாக்கும் பொறுப்பை யுனெஸ்கோ நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் சுற்றாடல் இயற்கை வள அமைச்சின் சூழல் முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பொறுப்பாளர் எச்.ஜி.குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

வியட்நாமில் கடந்த ஆண்டில் நடைபெற்ற சர்வதேச சூழல் பாதுகாப்பு மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமையவே நக்கிளஸ் மலைத்தொடர் சர்வதேச வன பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டது. ஏற்கனவே சிங்கராஜ, குமண ஆகிய வனப்பகுதிகள் சர்வதேச வனப்பகுதிகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. (உ-10)

## களுத்துறை உண்ணாவிரதிகளை விநாயகமூர்த்தி எம்.பி. நேற்று நேரில் பார்வையிட்டார்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் கடந்த முதலாம் திகதி முதல் தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டத்தினை நடத்திவரும் தமிழ் அரசியல் கைதிகளின நிலைமையைக் கண்டறிவதற்காக அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி நேற்றுக் காலை அங்கு விஜயம் செய்தார்.

அங்கு 6 ஆவது தினமாகவும் உண்ணாவிரதம் மேற்கொள்ளுவதாகவும் 87 கைதிகளில் 13 பேர் மயக்கம் அடைந்து மிகவும் கவலைக்கிடமான நிலையில் உள்ளதாகவும் உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் தமிழ் அரசியல் கைதிகள் தமது வழக்குகளை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கு மாற்றும் படியும்,

அவ்வாறு மாற்றுவதற்கு உடனடியாக முடியாவிட்டாலும் உடன் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் தம்மைக் கேட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இக்கைதிகளின் நிலையைக் கண்டறியவும் அவர்களுடன் விடுதலை தொடர்பாக பேசுவதற்கும மன்னார் மறை மாவட்ட ஆயர் கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகை இன்று சிறைச்சாலைக்கு விஜயம் செய்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## பல்கலை மாணவிகள் இருவர் பகிடிவதையால் மனநிலை பாதிப்பு

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பகிடிவதைச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட 3 மாணவிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கண்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இவர்கள் அதிர்ச்சி மனநிலையில் இருப்பதால் சட்ட மருத்துவ அதிகாரிகள் மேற்கொள்ளவிருந்த விசாரணைகளை பிற்போட்டுள்ளனர்.

இதனை மேற்படி பல்கலைக்கழகத்தின் பதிவாளர் டபிள்யூ.எச்.சுமணசிறி உறுதிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், இச்சம்பவம் பல்கலைக்கழக வளாகத்தின் வெளியே நடந்திருப்பதாகவும் கூறியுள்ளார். (உ-10)

## ஞாயிறு தோறும் இலவச உளவியல் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

ஆயுதப் போரினால் உடல்,உள ரீதியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இலவச உளவியல் சிகிச்சைகளை குடும்பப் புனர்வாழ்வு நிலையம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளது.

பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெறும் இந்தச் சிகிச்சைக் களத்தில் பங்கு கொள்ளத் தகுதியும் விருப்பமும் உடையவர்கள் கோயில் வீதியில் உள்ள நிலைய அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும், ஒவ்வோர் சிகிச்சைக் காலத்திலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே ஆட்கள் அனுமதிப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-4)

## தரம் 08 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டி

பரிசில்கள்

1ஆம் பரிசு ரூபா 500
2ஆம் பரிசு ரூபா 250
3ஆம் பரிசு ரூபா 150

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

*நாயன்மார்கட்டு **அமரர் இராமலிங்கம் இராசையா** அவர்கள் ஞாபகார்த்தமாகப் பரிசில்கள் வழங்கப்படும்.

### போட்டியின் விதிகள்

**தரம் எட்டில** இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* **கட்டுரையின் தலைப்பு :** ''எனக்குச் சிறகு முளைத்தால்''
* கட்டுரை 150 தொடக்கம் 175 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப் பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.03.2003 ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

### இணைக்கும் பத்திரம்

### கட்டுரைப் போட்டி இல-3

மாணவர் முழுப் பெயர் :------------------------------
பாடசாலை :------------------------------
கற்கும் தரம் :------------------------------

உறுதிப்படுத்துகிறேன்

------------------
ஆசிரியர்

## பஸ் சேவை இல்லை பக்தர்கள் நடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்தும், ஊர்காவற்றுறையில் இருந்தும் சாட்டிக்குச் செல்லும் வழி இல.779 பஸ்சேவை நீண்ட காலமாக நடைபெறாததால் சாட்டி புனித-சிந்தாத்திரை அன்னை ஆலயத்துக்குச் செல்வோர் மண்கும்பான் சந்தி, வங்களாவடிச் சந்தி ஆகியவற்றில் இறங்கி நடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (உ)

## யோகாசன வகுப்பு

(கொக்குவில்)

இந்து கலாசார விவகார அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் அனுசரணையுடன் யோகாசன வகுப்புக்கள் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் பி.ப. 5.00 தொடக்கம் 6.30 மணிவரை நடைபெற்று வருகின்றது. இதில் கலந்து பயன் பெறுமாறு இந்து கலாசார அமைச்சின் யாழ். பிராந்திய இணைப்பாளர் கேட்டுள்ளார். (உ-243)

* * * * *

(நல்லூர்)

நல்லூர் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் வெள்ளி, சனி தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை ஆண், பெண் இரு பாலாருக்கும் யோகாசன வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. (உ)

## கட்டுமரம் வழங்கல்

(கொக்குவில்)

காரைநகர் பிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபடும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மீனவர்கட்கு கட்டுமரங்களை நன்கொடையாக அல்லது தவணைப்பணத்தில் வழங்குவதற்கு இந்து கலாசார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக நீலங்காடு, கல்லந்தாழ்வு; வேரப்பிட்டி, மாதடை ஆகிய இடங்களில் வாழும வறிய மீனவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. (உ-243)

## தரவட்டச் செயலமர்வு

(நெடுந்தீவு)

6,8 ஆம் தரங்களுக்கு தமிழ் மொழியும் இலக்கியமும் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தரவட்டச் செயலமர்வு நாளை சனிக்கிழமை தீவக வலயத்தில் நடைபெறவுள்ளது.

தீவக வலயத்துக்குட்பட்ட தமிழ் மொழியும் இலக்கியமும் கற்பிக்கும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை பாடக் குறிப்பு, பாடநூல் என்பவற்றுடன் தீவக வலயத்திற்கு தவறாது சமுகம் தருமாறு தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-117)

# தொலைபேசிக் கட்டண உயர்வை அனுமதிக்க முடியாது

### பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

தொலைபேசிக் கட்டணங்களை அதிகரிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை அமுல் செய்ய ஒருபோதும் இடமளிக்கப்படமுடியாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நுகர்வோரிற்கான தொலைபேசிக் கட்டணங்களை அதிகரிக்கப்போவதாக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தினர் அறிவித்திருந்தமை தொடர்பாக கருத்துக் கூறுகையில் பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொலைபேசி அழைப்பிற்கான ஒரு அலகின் கட்டணத்தை 1 ரூபா 10 சதத்தில் இருந்து 2 ரூபா 95 சதம்வரை அதிகரிக்கப்போவதாக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தினர் அறிவித்திருந்தமைக்கு அமைய கட்டணம் அதிகரிக்கப்படுமானால் 8 லட்சம் பாவனையாளர்களில் 65 சதவீதமானவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது குறித்து தமக்கு விரைவாக அறிக்கை சமர்ப்பிக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடனடியாக கவனம் செலுத்துமாறும் பிரதமர் பணித்துள்ளார். (உ-10)

## சம்பள ஆ.குழுவின் சிபார்சுகளில் நிலவும் குறைபாடுகளை களைய குழு அமைப்பு

(கொழும்பு)

திஸ்ஸ தெய்வேந்திர சம்பள ஆணைக்குழுவின் சிபார்சுகளில் நிலவும் குறைபாடுகளை நீக்குவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சர்களுக்கான கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

அரசாங்க ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகளை அதிகரிப்பது இதன் நோக்கம் என்றும்,

கூடிய விரைவில் சம்பளக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படும் எனவும் அமைச்சரவையில் அறிவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## தமிழக மீனவர்கள் 93 பேர் நேற்று தாயகம் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

மன்னார் கடற்பரப்பில் வைத்து இலங்கை மீனவர்களால் பிடிக்கப்பட்ட 91 மீனவர் உட்பட 93 இந்திய மீனவர்களையும் நேற்றுக் காலை இலங்கைக் கடற்படையினர் இந்திய நாட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

இவர்களில் 91 பேர் மட்டுமே இலங்கை மீனவர்களால் பிடிக்கப்பட்டவர்கள் என்றும் மற்றைய இரு மீனவர்களும் இலங்கைக் கடற்படையின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தவர்கள் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை இவர்களை இலங்கை வடகடல் எல்லையில் வைத்து இலங்கைக் கடற்படையினர் இந்தியக் கடற்படையிடம் ஒப்படைத்தாக கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-10)

## கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் இடமாற்றம் ம.உ.ஆ. குழுவில் முறையீடு!

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் சி.ஞானேஸ்வரன் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டமை அடிப்படை மனித உரிமை மீறல் எனத் தெரிவித்து யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எந்தவித முன்னறிவித்தலும் இன்றி அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், இது விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போது அவர்கள் எதுவித நடவடிக்கைகளும் எடுக்காமல் மௌனம் சாதிப்பதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி அதிபரின் இடமாற்றத்தைக் கண்டித்தும், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பெண் அதிபருக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கடந்த 3 ஆம் திகதி பாடசாலையின் வாயில் முன்பாக பெற்றோர் திரண்டு மறியற்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (த)

## புதிய அரசியல் கலாசாரத்திற்கு அடித்தளம் பாராளுமன்றச் செயற்பாடுகளை வளம்படுத்த 17 மேற்பார்வைக் குழுக்கள்

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் செயற்பாடுகளை வளம்படுத்தும் நோக்கில் 17 மேற்பார்வைக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

புதிய அரசியல் கலாசாரம் ஒன்றின அடித்தளமாக இந்த மேற்பபார்வைக் குழுக்கள் அமைகின்றன.

இந்தத் தகவலை நேற்றைய தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த மாநாட்டில் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

மேற்படி குழுக்களின் தலைவராக எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படுவதுடன், ஆளும் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளும் இக்குழுக்களில் அங்கம் வகிப்பர் எனத் தெரிய வருகிறது.

இந்தக் குழுக்கள்அமைத்தல் தொடர்பானதும் அதன் பணிகள் குறித்ததுமான இறுதித் தீர்மானம் எதிர்வரும் 19 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, இக்குழுக்களுக்கும் அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது எனவும் தேவையேற்படின் இவர்களை விசாரிக்கவும் இக்குழுக்களுக்கு அதிகாரம் உண்டெனவும் அமைச்சர்களின் நடவடிக்கைகளுக்கான சிபார்சுகளையும் இக்குழுக்கள் முன்வைக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ)



யா/சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய செயற்பாட்டறைத் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட என்.ரவிராஜ் எம்.பி பாடசாலை அதிபரால் அழைத்து வரப்படுகிறார்.

# கடைசி நேரத்தில் பிரிட்டனின் ஒரு சமரச முயற்சி

(வாஷிங்டன்)

ஈராக்கில் யுத்தமா? அமைதியா? என்பது குறித்து பாதுகாப்புசபை உறுப்புநாடுகள் கசப்பான கருத்து முரண்பாடுகளுக்குள்ளாகியுள்ள அதேவேளை பேரழிவு ஆயுதங்களை அழித்தொழிப்பதற்கு ஈராக்கிற்கு மேலும் அவகாசம் அழிப்பது பற்றிய ஒரு புதிய சமரச முயற்சியில் பிரிட்டன் இறங்கியிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரான்ஸும் ரஷ்யாவும் கடும் எதிர்ப்பைக் காட்டி வருவதால் பிரிட்டனின் புதிய யோசனை ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்திற்கு ஒரு திருத்தமாக இருக்காதென்றும், ஈராக்கிற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் புதிய வார்த்தைகளில் இது அமையலாம் என்றும் கருதப்படுகின்றது.

இந்தப் புதிய முயற்சி இன்னமும் முடிவு எதையும் எடுக்காமல் இருந்து வரும் மெக்ஸிகோ, பாகிஸ்தான், சிலி ஆகிய நாடுகளைக் கவரும் நோக்கத்துடனேயே முன் வைக்கப்படுவதாகவும் கருதப்படுகின்றது.

வழங்கப்பட்ட கடைசி சந்தர்ப்பத்தையும் ஈராக் தவற விட்டு விட்டதாகக் குறிப்பிட்டு அமெரிக்காவும் பிரிட்டனும் தாக்கல் செய்துள்ள தீர்மானம் அடுத்தவாரம் வாக்கெடுப்புக்கு விடப்படவிருக்கின்றது.

பிரான்ஸ், ரஷ்யா, ஜேர்மனி, சீனா, சிரியா ஆகியவை நிச்சயமாக இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கப் போவதில்லை. மெக்சிக்கோ, சிலி, பாகிஸ்தான், கமரூன், கினி, அங்கோலா ஆகிய 6 நாடுகளும் இன்னமும் தமது நிலைப்பாடு பற்றி தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை.

பிரிட்டனின் புதிய யோசனை வரும் வெள்ளியன்று பாதுகாப்புச் சபை 15 உறுப்பு நாடுகளும் ரகசியமாகக் கூடும் போது அவர்கள் மத்தியில வெளியிடப்படும் என்று எதிர் பார்க்கபடுகின்றது. ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்கள் ஹான்ஸ்பிளிக்ஸ், மொஹம்மத் எல் பரடே ஆகியவர்கள் சமர்ப்பிக்கவிருக்கும் அறிக்கைகளையடுத்து பாதுகாப்புச் சபை இரகசியமாக சந்திக்கவிருக்கின்றது.

இதற்கிடையில் யுத்த ஆயத்தங்கள பற்றி அதிபர் புஷ் இராணுவ ஜெனரல டொமி பிராங்க்ஸ் உட்பட தனது உயர மட்ட ஆலோசகர்களுடன் மந்திர ஆலோசனை நடத்தியிருக்கிறார்.

சதாமை நிராயுதபாணியாக்குவதற்கு வேறு வழியில்லை என்றால் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் பலவந்தமாக அதைச் செய்தே தீருவோம் என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொலின் பவல் கூறியுள்ளார்.

தீர்மானத்தை நிறைவேற்றி உதவும படி அவர் பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளைக்கேட்டுக் கொண்டார. (பி)



வட இஸ்ரேலிய நகரமான ஹைபாவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் காயமுற்ற இஸ்ரேலியர் ஒருவருக்கு முதலுதவி வழங்கப்படுகின்றது. கடந்த 5ஆம் திகதி பஸ் ஒன்றில் தற்கொலை குண்டுதாரி ஒருவர் நடத்திய இந்த தாக்குதலில் பஸ் இரண்டாகப்பிளந்து 15பேர்வரை கொல்லப்பட்டு 40பேர் காயமுற்றனர்.

# இரட்டைக் கட்டடத் தகர்ப்புக்கு முன் எடுக்கப்பட்ட வீடியோப் படம்

## அதிகாரிகளிடம் சிக்கியது

(நியூயோர்க்)

செப்ரெம்பர் 11 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலுக்கு முன் அதற்கு ஆயத்தம் செய்வதற்காக பயங்கரவாதிகள் தயாரித்த வீடியோப் படம் அதிகாரிகளிடம் சிக்கியுள்ளது.

நியூயோர்க் உலக வர்த்தக மையத தின் இரட்டைக் கோபுரக் கட்டடத்தைப் பயங்கரவாதிகள் பல்வேறு கோணங்களில் நுணுக்கமாக வீடியோப்படம் எடுத்துள்ளனர்.

கட்டடங்களைச் செப்ரெம்பர் 11 ஆம் திகதி தகர்க்கும் முன் அந்த வீடியோ எடுக்கப்பட்டுள்ளது. இது ஏ.பி.சி தொலைக்காட்சியில் ஒளி பரப்பப்பட்டது.

அதில் கட்டடங்களின் மூலை முடுக்குகளையும் விடாமல் பல்வேறு கோணங்களில் உள்ளேயிருந்தும் வெளியிலிருந்தும் மேல்தளத்திலிருந்தும் தரைத்தளத்திலிருந்தும் அங்குலம் விடாமல்பதிவு செய்யப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி பகலிலும், இரவிலும கூடத்தனித்தனியே படம் பிடிக்கப் பட்டுள்ளது. கட்டடங்களின் பலவீனமான பகுதிகள் எவையெவையென்றெல்லாம் அப்படம் காட்டியுள்ளது.

உடனுக்குடன் காட்சிகளை விரிவாக விளக்கும் வர்ணனையும் இடம் பெற்றுள்ளது. அந்தந்தக் காட்சிகள் எங்கிருந்து எடுக்கப்பட்டன எதைக் காட்டுகின்றன என்ற விபரங்களும் அதில் இடம்பெற்றுள்ளன. பல நாட்கள் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த வீடியோக் காட்சியில் கட்டடங்களிற்கு அருகில் ஒரு விமானம் பறப்பதும் துல்லியமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நியூயோர்க் கட்டடங்கள் மட்டுமன்றி எம்பயர் ஸ்டேட் கட்டடம் உட்பட இதர முக்கிய கட்டடங்களையும் பயங்கரவாதிகள் வீடியோப் பதிவு செய்துள்ளனர். (பி)

உலக தரிசனம்

### சீனாவில் மீண்டும் நிலநடுக்கம்

(பெஜ்ஜிங்)

சீனாவில் கடந்த வாரம் பூகம்பம் ஏற்பட்ட பகுதியில் மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நில நடுக்கம் 5.2 ரிக்டர் அளவு பதிவானது. இதனால் சேதம் ஏதும் இல்லை. வடமேற்கு சீனாவில் ஜின்ஜியாங் மாகாணத்தில் பாச்சு என்ற இடத்தில் பெப். 24 ஆம் திகதி பூகம்பம் ஏற்பட்டது. இதனால் 268 பேர் இறந்தனர். 2000 பேர் காய மடைந்தனர். அங்கு தற்போது கடும் பனிபொழிவதால் மீட்புப் பணிகள் பாதிக்கப் பட்டுள்ளன. (பி)

### ஆப். அதிபர் புதுடில்லி விஜயம்

(பக்தாத்)

ஆப்கானிஸ்தான் அதிபர் அமீர்கர்ஷான் 4நாள் அரச முறைபப பயணமாக நேற்று புதுடில்லி வந்தடைந்துள்ளார்.

இன்று புதுடில்லியில் நடைபெறவுள்ள சம்பிரதாய வரவேற்பு முடிவடைந்ததும், இந்தியத் தலைவாகளுடனான அதிகார பூர்வபேச்சு வார்த்தைகளை அவர் நடத்தவுள்ளார்

ஆபகானிஸ்தானில் மேற்கொள்ளவுள்ள சீர்திருத்தப்பணிகளில் இந்தியாவின் பங்குஎன்னஎன்பது குறித்து முக்கியமாக பேச்சு நடத்துவார். (பி-2)

# தற்கொலைத்தாக்குதல்களுக்காக யசீர் அரபாத் மீது குற்றச்சாட்டு

### இஸ்ரேலியர்கள் பாரிசில் வழக்குத்தாக்கல்

(ரெல்அவிவ்)

இஸ்ரேலில் மேற் கொள்ளப்பட்ட பலஸ்தீனர்களின் தாக்குதலினால் கொல்லப்பட்ட யூதர்களின் உறவினாகள், பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அரபாத் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தி பாரிஸ் நீதிமன்றம் ஒன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

மனுதாரர்கள் 7பேர் பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்தவர்கள், எனினும் இவர்கள் இஸ்ரேலிலே வசித்து வருகிறார்கள்.

பலஸ்தீன தனிநாட்டுக் கோரிக்கையுடன் யூதர்கள் மீதான தாக்குதல்களை ஏற்பாடு செய்ததாக அரபாத் மீது இவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

கடந்த 2000ம் ஆண்டு செப்டம்பரில் பலஸ்தீன ஆர்ப்பாட்டம் ஆரம்பித்தது முதல் ஆயிரத்து 888பலஸ்தீனர்களும் 706 இஸ்ரேலியர்களும் வன்முறைகளில் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறான வன்முறைகளில் இஸ்ரேலில்இடம் பெற்ற பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களே இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

பலஸ்தீன அதிகார சபை, பலஸ்தீன விடுதலை இயக்கம், பாட்டா மற்றும் அரபாத்துடன் தொடர்புபட்டவரென சந்தேகிக்கப்படும் அல் அக்ஷாத் தியாகிகள் படை ஆகியவர்களே இந்த தாக்குதல்களில் ஈடுபட்டதாக வழக்குத்தாக்கல் செய்தவர்கள் கூறுகின்றனர்.

ஒரு நாட்டின் பிரஞ்சு சட்டத்தின்படி அந்தப்பதவியில் இருக்கும் வரை நீதிமன்றம் அவர் மீது குற்றம் சுமத்தமுடியாது எனினும் பலஸதீன தனிநாடு இன்னும் உருவாகாததால் அரபாத் பிரஞ் நீதிமன்றத்தில் சட்டத்திற்கு உட்பட்டவர் என்று வழக்கு அறிஞர்கள் கூறுகின்றனர். (பி-2)




ஈராக்மீது போர் தொடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உயர்பாடசாலை மாணவமாணவியர் சான்பிரான்சிஸ்கோ நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் போகிறார்கள் ''குண்டுகள் அல்ல புத்தகங்கள'' என்ற தலைப்பில் அமெரிக்கா முழுவதும் மாணவர் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

# அமெரிக்காவிலமாணவர்கள போர்எதிர்ப்புஆர்ப்பாட்டம்

(சிக்காகோ)

அமெரிக்கா ஈராக்மீது போர் தொடுக்கவிருப்பதை ஆட்சேபித்து பாடசாலைமாணவர்கள் வகுப்பறைகளைவிட்டு வெளியேறி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டங்கள் பரவலாக நடைபெற்றதாகவும் பெரிதாக இருக்கவில்லையென்று கருதப்பட்டாலும் 200உயர்தர பாடசாலைகளும் கல்லூரிகளும் பாதிக்கப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் கூறினார்கள்.

லொஸ்ஏஞ்சலஸில் சமயத் தலைவர்களும் தேவாலய ஊழியர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 19பேர் கைது செய்யப்பட்டனர். கன்னியாஸ்திரிகள் உட்பட தேவாலய ஊழியர்களும் போதகர்களும் கைகளைக் கோர்த்துக்கொண்டு போக்குவரத்தைத் தடை செய்தனர். பொலிஸார் இருவர்கள் அப்புறப்படுத்தியதையடுத்து அவர்கள் அமைதிக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள் என்ற கீதத்தை இசைத்தனர். சிக்காகோவில் பல பாடசாலைகளில் மாணவர் வெளியேறி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

### அவுஸ்திரேலியாவில்

அவுஸ்திரேலிய மாணவர்கள் சிட்னி நகரில் யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன்ஹவாட் ஒரு யுத்தப்பிரியர் என்று கோஷமிட்டனர்.

புத்தகங்கள் குண்டுகள் அல்ல என்றும் எங்கள் எதிர்காலத்தை குண்டு வெடிப்புச்சம்பவங்கள் நிறைந்ததாக மாற்றவேண்டாம் என்றும் கோசமிட்டவாறு மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஈராக்மீதான யுத்தத்தை தடுப்பது எமது கல்வியின் ஒரு முக்கியபங்காகும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கோஷமிட்டனர். (பி-9)

# ராமேஸ்வரம் - தலைமன்னார் பாலம் அமைக்கும் யோசனை சேது சமுத்திர திட்டத்தைப் பாதிக்கும்

## வைகோ எதிர்ப்பு

(புதுடில்லி)

ராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையில் பாலம் அமைக்கும் யோசனைக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத் தலைவா வைகோ எதிர்ப்புத் தெரிவித்திருந்துள்ளார்.

இத்திட்டம் சேது சமுத்திரத்திட்டத்தை சீர்குலைக்கும் நோக்கமுடையது என்று வைகோ கூறியுள்ளார்.

அண்மையில் இந்தியா சென்றிருந்தபோது இலங்கை பிரதமர் ரணில விக்கிரமசிங்க பாலம் அமைக்கும் யோசனையை வெளியிட்டிருந்தார்.பெரிய பன்நாட்டுக்கப்பல்களின் போக்குவரத்து இருக்கும்வகையில் சேதுசமுத்திரத்திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுப்பதற்கு பிரதமர் தலையிட வேண்டும் என்றும் அதுதான் தமிழக மக்களுக்கு நீதி வழங்குவதாக அமையும் என்றும் திரு. வைகோ வேலூர் சிறையில் இருந்து பிரதமருக்கு நேற்று முன்தினம் எழுதிய கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

சேது சமுத்திர திட்டத்தை சீர்குலைக்கும் நோக்கத்துடன் ராமேஸ்வரத்திற்கும், தலைமன்னாரக்கும் இடையில் பாலம் ஒன்றினை அமைக்கலாம் என்று இலங்கை அரசு கூறியிருக்கின்றது என்றும் சேது சமுத்திரத் திட்டத்தை முறியடிக்கும் நோக்கத்தில் இலங்கை தெரிவித்துள்ள இந்தத் திட்டத்திற்கு பிரதமர் ஒப்புதல் அளிக்கமாட்டார் என நான் நம்புவதாக அந்தக் கடிதத்தில் திரு. வைகோ கூறியிருக்கின்றார். (பி-9)

### ரஷ்யர்கள் வெளியேற்றம்

(மஸ்கோ)

ஈராக்கில் உள்ள ரஷ்ய வர்த்தக சமூகத்தைச்சேர்ந்த 150பேர் நேற்று முன்தினம் அங்கிருந்து வெளியேறி உள்ளனர்.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்கும் என்ற அச்சத்தில் இவர்கள் வெளியேறியதாகத் தெரியவருகிறது. (பி-9)

# தீர்மானத்துக்கு எதிரான மூன்று நாடுகள் சந்திப்பு

(பாரிஸ்)

ஈராக் மீது போர் தொடுப்பதை எதிர்க்கும் பிரான்ஸ், ரஷ்யா, ஜேர்மனி ஆகிய நாடுகள் நேற்று முன்தினம் பாரிஸ் நகரில் விசேட கூட்டமொன்றை நடத்தியுள்ளன. ஈராக் மீது தாக்குதல் மேற்கொள்ளும் அமெரிக்காவின் திட்டத்திற்கு எதிராக தங்கள் ஆதரவை மேலும் வலுப்படுத்துவது குறித்து ஆராயவே இந்த விசேட கூட்டம் நடத்தப் பட்டது.

இன்று நடைபெறவுள்ள ஐ.நா.சபையின் கூட்டத்தில் தங்கள் நிலைப்பாடு பற்றி விளக்குவது குறித்து இந்தக் கூட்டத்தின் போது விரிவாக ஆராயப்படும்.

நேற்று முன்தினம் நடைபெற்ற 3 நாடுகளினதும் வெளிவிவகார அமைசசர்களின் கூட்டத்தில் அமெரிக்கா தாக்குதலை மேற்கொள்ள முற்பட்டால் அதனைத் தவிர்ப்பதற்கு ஐ.நா. பாதுகாப்பு சபையில் அழுத்த வலி கொடுப்பது என்று தீர்மானிக் கப்பட்டுள்ளகு. (பி-9)

## கடந்த ஈராண்டுகளில்
# வீதி விபத்துக்களால் 4,319 பேர் மரணம்

(கொழும்பு)

ஆசிய உடற்காயத் தடுப்பு நிறுவனத்தின் ஆய்வுகளின் படி அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிடையே இலங்கை வீதிவிபத்துகளில் மிகவுயர்வான இடத்தை பிடித்துள்ளது.

2001இல் 52 ஆயிரத்து 57 வீதிவிபத்துக்களும் 2002 இல் 55ஆயிரத்து 31 வீதி விபத்துக்களும் இடம்பெற்றுள்ளன.

2001 இல் 2 ஆயிரத்து 159 மரணங்களும் 2002 இல் 2 ஆயிரத்து 60 மரணங்களும் வீதிவிபத்துக்களால் நிகழ்ந் துள்ளன.

"ஏசியா இன்ஜறி நிறுவனம்" இவ்வாரம் கொழும்பு ட்ரான்ஸ் ஏசிய ஹோட்டலில் வீதிப்பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்தியது.

இதில் சர்வதேச உதவிநிறுவனங்களும், தனியார் துறை மற்றும் அரச நிறுவனங்களும்,.பொலிஸ் திணைக்களப் பிரதிநிதிகளும் பங்குபற்றியிருந்தனர்.

போக்குவரத்து தொடர்பில் ஏற்படும் விபத்துக்களை தவிர்ப்பது பற்றி ஆராயப்பட்டபோது சில அதிர்ச்சிதரும் உண்மைகள் முன்வைக்கப்பட்டு ஆராயப் பட்டன.

இலங்கையில் வீதிவிபத்துக்களுக்கு முக்கியமாக, முதன் முறை வாகனம் ஓட்டுபவர்கள், வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் ஓட்டுபவர்கள் காரணமாயுள்ளனர் என்று எடுத்துக் கூறப்பட்டது.

எமது திட்டம் சாரதி பயிற்சியையும், வீதிபாதுகாப்பு நடைமுறைகளைக் கற்பிக்கும் விழிப்புணர்வு பிரசாரத்தையும் இணைத்து செயற்படுத்துவதாகும். இதன் மூலம் இதன் நன்மைகளை உடனுக்குடன் பெறமுடியும் என்று அமைப்பின் தலைவர் கிறீக் கிறாப்ற் தெரிவித்தார்.

ஒரு சாரதிப் பயிற்சி மையம் உருவாக்கி சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்றும் இதன் மூலம் நல்லபயன் பெறமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ)

## இலங்கைப் பாராளுமன்றக் குழு
# சமஷ்டி குறித்து ஆராய்வதற்கு வெளிநாடுகளுக்குப் பயணம்

(கொழும்பு)

13 பேர் கொண்ட இலங்கைப் பாராளுமன்றத்தின் மனித உரிமைகள் குழு சமஷ்டி அமைப்புக் குறித்து ஆராயும் பொருட்டு நேற்று வெளிநாடு பயணமாகியுள்ளது.

இக்குழு, எதிர்வரும் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சுவிற்சர்லாந்து, இந்தியா ஆகிய நாடுகளில் சமஷ்டி அமைப்புக் குறித்து பல்வேறு கலந்துரையாடல்கள் கருத்தமர்வுகளில் ஈடுபடவுள்ளது.

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, பாராளுமன்ற உறுப்பினர்களான நந்தன குணதிலக, கே. பியதாஸ, வி. புத்திசிகாமணி, டிலான் பெரேரா, சுசில் பிரேமஜயந்த, ரிஷாத்பதியுதீன், அனுராபிரியதர்ஷன யாப்பா, லக்ஷ்மன் விஜயமான, ஆர். சம்பந்தன், பாராளுமன்ற உப செயலாளர் நாயகம் டி. திஸநாயக்க, நிர்வாக உதவிப்பணிப்பாளர் ஜே. சமரவீர ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். (உ)

## அரச அதிகாரிகள்
# அலுவலகத்தில் இருக்க வேண்டுமென உத்தரவு

(கொழும்பு)

மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் புதன்கிழமைகளில் அரச அதிகாரிகள் அனைவரும் தமது அலுவலகங்களில் இருக்க வேண்டும் என உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அலுக் அலுவிகார உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்தக் கட்டளை கிராம உத்தியோகத்தர்களுக்கும் பொருந்துவதால் அவர்களும் புதன்கிழமைகளில் கட்டாயம் தமது அலுவலகங்களுக்கு சமுகமளிக்க வேண்டும்.

தமது பிள்ளைகளுக்கு பாடசாலை சீருடைகளை பெறுவதற்கும் பல்வேறு தேவைகளுக்காகவும் சிபார்சுகளைப் பெற கிராம உத்தியோகத்தர்களை நாடும் பொது மக்கள் அவர்கள் அங்கு இல்லாமையால் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன், தற்போது பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்கும் புதிய நடைமுறையினால் மக்கள் கிராம உத்தியோகத்தர்களிடம் அலைந்து திரிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர்கள் புதன்கிழமைகளில் அவர்களது அலுவலகங்களில் இருப்பது இல்லை எனவும், இதனால் தாம் பலத்த சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

எனவே, மக்களின் தேவைகளை நிறைவேற்றத் தவறும் சகல அதிகாரிகளுக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் எச்சரித்துள்ளார்.

அத்துடன் இந்த உத்தரவு சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கும், விவசாய முகவர்களுக்கும் பொருந்துவதால் இவர்கள் அனைவரும் தாம் அலுவலகத்தில் இருப்பது பற்றி அறிவிப்புப் பலகையில் பொதுமக்களிற்கு கட்டாயம் தெரியப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (உ-10)

# துரையப்பா வி. அரங்க புனரமைப்புக்கு 5 கோடி

(மண்கும்பான்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சிறந்த மைதானமான துரையப்பா விளையாட்டரங்கு புனரமைக்கப்பட இருப்பதாக பல தடவைகள் செய்தி வெளிவந்தபோதிலும் எவ்வித முன்னேற்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயினும், தேசிய விளையாட்டுப் போட்டி இம் மைதானத்தில் நடாத்தப் படவிருப்பதால் புனரமைக்கப்பட வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்துக்கு விஜயம் செய்த விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ இவ்விளையாட்டரங்கின் புனரமைப்பைப்பற்றி பிரஸ்தாபித்திருந்தார்

அத்துடன், அமைச்சின் நிர்வாக இயக்குநர் ஏ.ஏ. மில்ரன் அமரசிங்க இம் மைதான புனரமைப்புக்கு 5 கோடி ரூபா அமைச்சின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், மிக விரைவில் புனரமைப்புப்பணிகள் ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும், தேசிய விளையாட்டுப் போட்டிகளுக்கிடையில் சர்வதேச தரத்துக்கு துரையப்பா விளையாட்டரங்கை உயர்த்துவதற்கு தமது அமைச்சு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

எனினும் கடந்த காலங்களில் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றதைப் போலவே இம்முறையும் நடைபெறுமா என விளையாட்டு அதிகாரிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். எது எவ்வாறிருப்பினும் விளையாட்டுப்போட்டிகள் யாழ். மாவட்டத்தில் இடம்பெற வேண்டுமெனின் துரையப்பா விளையாட்டரங்கு புனரமைக்கப்படுவது அவசியம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-55)

## கமலசபேசனிடம் ஆலோசனை

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஆணையாளர் கிங்ஸ்லி விக்கிரமசூரியாவுக்கு எதிரான முறைப்பாடுகள் சம்பந்தமாக சட்டமா அதிபர் கமலசபேசனின் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப் படவுள்ளன.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் இரகசியத் தகவல்களை ஜனாதிபதிக்கு வழங்கினார் என்று குற்றஞ் சாட்டி இவர் மீது அமைச்சர் எஸ்.பி.திஸ்ஸநாயக்கா முறைப்பாடு செய்திருந்தார்.

இது சம்பந்தமாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலஞ்ச ஊழல் ஆணையாளர் மீதும், ஆணைக்குழுவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பீற்றர் குணதிலக மற்றும், சரத்நந்தசேன மீதும் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. (உ-8)

## விஞ்ஞான ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

வானியல் பாசறையில் பங்குபெற விரும்பும் வலிகாமம் வலய ஆசிரியர்கள், இன்று வெள்ளிக்கிழமை, யா/ இணுவில் இந்துக்கல்லூரிக்கு மாலை 6.00மணிக்கு; இரவு தங்கும் ஆயத்தங்களுடன் சமுகம் கொடுக்குமாறு விஞ்ஞான உதவிக் கல்விப்பணிப்பாளர் சி. விஜயேந்திரசர்மா கேட்டுள்ளார். (உ)

## கணிதபாட செயலமர்வு

(நெடுந்தீவு)

தீவக வலயக் கல்வி ஆசிரியர்களுக்கான தரம் 5 கணித பாட செயலமர்வு எதிர்வரும் 11,12,13 ஆம் திகதிகளில் ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் தரம் 5 இல் கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு தீவகவலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-117)

## தெய்வ ஆசி வேண்டி பொங்கல்

(தென்மராட்சி)

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ். பல்கலைக்கழகத்திற்கும் ஊழியர்களுக்கும் தெய்வ ஆசி வேண்டி இன்று மாபெரும் பொங்கல் விழா இடம்பெறவுள்ளது.

பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய முன்றலில் இப்பொங்கல் விழா இடம்பெறவுள்ளது. (உ-77)

## தேனீக்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மயிலணி ஜனசக்தி இளைஞர் கழகத்தின் தேனீக்கள் கையெழுத்து சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப 4மணிக்கு ஜனசக்தி சனசமூக நிலையத்தில் நடாத்தப் படவுள்ளது. (உ-10)

## 3ஆம் ஆண்டு நினைவுதினம்

(தென்மராட்சி)

குமார் பொன்னம்பலத்தின் மூன்றாம் வருட நினைவுதின நிகழ்வு நெல்லியடி லட்சுமிதிரையரங்கில் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3 மணிக்கு இ. உருத்திரா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் அ. விநாயகமூர்த்தி, வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா, யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஆ. சிவானந்தமூர்த்தி ஆகியோர் நினைவுரைகளை ஆற்றவுள்ளனர். (உ)

## பேடன் பவல் தின விழா

(மண்கும்பான்)

யாழ்ப்பாண மத்திய கல்லூரி சாரணர்களின் 2003ம் ஆண்டுக்கான பேடன் பவல் தினவிழா இன்று மு.ப.1.00மணிக்கு தம்பர் மண்டபத்தில் சாரணத்தலைவர் எஸ். சுபாஸ்கரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதமவிருந்தினராக நல்லூர்ப்பிரதேச சபையின் செயலாளர் எஸ். செல்வரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார். (உ-55)

## தமது சகோதரர்கள் போல
# புலிகள் எம்மைக் கவனித்தனர்
### விடுதலையான இருவரும் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகள் எம்மை உணவு, உடை மற்றும் சகல விடயங்களிலும் மிகவும் சிறப்பாகவும் தமது சகோதரர்கள் போலவும் கவனித்தனர். அத்தகைய உயர்குணம் கொண்ட விடுதலைப் புலிகளுக்கு எமது நன்றிகள்.

இவ்வாறு விடுதலை பெற்றுச் செல்லும் ஸ்ரீலங்கா இராணுவக் கோப்ரல் எஸ். ஜி. நிமல் குமார, பொலிஸ் சாஜன் ஆனந்தசேகர ஆகிய இருவரும் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளின் அன்பான உபசரிப்பினால் எமக்கு கைதிகள் என்ற உணர்வே இல்லாமல் போய் விட்டது.

தமிழீழக் காவல்துறையினரின் வளர்ச்சியைப் பார்க்கும் போது எமக்கு வியப்பாக உள்ளது.

எமது அரச படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் புலிகளின் போராளிகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற கருத்தைத் தாம் வலியுறுத்தப் போவதாகவும் அவர்கள் இருவரும் மேலும் தெரிவித்தனர். (இ)

## நெருப்புக் காய்ச்சல்
# வேகமாகப் பரவுகிறது

(சுதுமலை)

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டைப் பகுதியில் இவ்வாரம் மட்டும் 10க்கும் மேற்பட்டவர்கள் நெருப்புக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் குறிப்பாக மலசல கூடங்கள் இல்லாமையே இவ்வாறு தொற்று நோய்பரவுவதற்கு முக்கிய காரணம் எனவும் சிறுவர்கள் கண்ட இடங்களில் மலம் கழித்து வருவதாகவும் அப் பகுதிப் பொதுச் சுகாதார அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் காய்ச்சல் ஏற்பட்டவர்களின் வீடுகளிற்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தடுப்பு நடவடிக்கையின் முக்கியத்துவம் தொடர்பாகவும் பூரண சிகிச்சையின் முக்கியத்துவம் தொடர்பாகவும் ஆலோசனை வழங்கிவருகின்றார். குடிநீர் பெறும் கிணறுகளுக்கும் குளோரின் இடப்பட்டுவருகின்றது.

இதேவேளை காய்ச்சல் ஏற்பட்டுள்ளவர்களின் வீடுகளின் சுற்றாடல்களில் தொற்றுநீக்கி மருந்துகள் விசிறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-252)



சுவாமி விவேகானந்தர் கண்காட்சி அண்மையில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட இந்திய உயர்ஸ்தானிகராலய ஆலோசகர் கே.பி. கோகுலச்சந்திரன், சுவாமி சித்ருபானந்தா ஆகியோரைப் படத்தில் காணலாம்.



வண்ணை நாவலர் மகாவித்தியாலயப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வுபெற்ற யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜகோபால் வரவேற்கப்படும் காட்சி

# இளைஞர் கனவு

"இதிலை இருங்கோ சிவ தாஸ்....."

கதிரையில் இருந்தார் என்னை நிமிர்ந்து பார்க்க வில்லை. பத்து நிமிடத்திற்கு மேலாகத் தலையைக குனிந்தபடி கதிரையைக் கையால் சுரண்டிக் கொண்டு அமர்ந்திருந் தார் எதுவும் பேசவில்லை.

"உங்களுக்குக் கதைக்கக் கஷ்டமாய் இருக்குப்போல....."

"......................."

"என்னோடை ஏதோ கதைக்க எண்டுதான் வந்தனீங்கள். எண் டாலும் எப்பிடித் தொடங்கியது எங்கை தொடங்கிறது எண்டு தெரி யாமல் இருக்கு....."

மெதுவாக தலையை நிமிர்த்தி என்னை பார்க்கிறார் "இப்ப எங்கையிருந்து வாறீங்க....?"

"செந்தீ முகாமிலை இருந்து... முந்தி வன்னியிலை இருந்தனாங் கள்...."

"இடம் பெயர்ந்து இருக் கிறீங்கள்....."

"ஓம்...." மெதுவாகத் தலை யாட்டிவிட்டு மீண்டும் அமைதி யானார். சிறிது நேரம் பொறுத்திருந் தேன்.

"உங்களுக்கு விருப்பமான விஷயங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கோ....."

"அம்மாவிலைதான் விருப் பம்......"

"ஆஹா..... சிவதாஸ்"க்கு அம்மாவிலை சரியான விருப்பம் அதைச் சொல்லேக்கையே உங் களுக்குச் சந்தோஷமாக இருக்கு.... அப்ப அப்பா....."

"அவர் எங்களோடை இல்லை..."

மீண்டும் தலை குனிந்தார். இரண்டு கைகளையும் எடுத்துத் தனக்குள் பிசைந்து கொண்டார்.

"உங்கடை அப்பா உங்களோடை இல்லை எண்றது உங்களுக்குக் கவலையா இருக்கு இல்லையா? அப்பாவைப் பற்றிக் கொஞ்சம் சொல்றீங்களா சிவதாஸ்.....?"

"அவர் வேறை கலியாணம் செய்து போட்டார். எங்கடை வட்டை வாறது குறைவு. எப்பாலும் இருந் திட்டு வருவார். வந்தாலும் அம்மா வோடை சண்டை பிடிப்பார்"

"அப்பா வீட்டை வராமல் இருக் கிறதும் வந்தாலும் அம்மா வோடை சண்டைபிடிக்கிறதும் உங்களைச் சரியாப்பாதிச் சிருக்கு......"

மீண்டும் ஒரு முறை குனிந்தார். கதிரையைக் கடுமையாகச் சுரண் டினார்.

"சிவதாஸ்"க்குப் படம் கீற விருப்பமா?"

எனது கண்களுக்குள் பார்த்தார். ஒரு கடதாசியையும் கலர்ப் பெட்டி யையும் நீட்டினேன். மௌனமாகப் பெற்றுக் கொண்டார். நிலத்தில் அமர்ந்து கலர்ச் சோக்குகளைப் பரப்பினார். பின்னர் கையால் படத்தை மறைத்து மறைத்துக் கீறி முடித் தார்.

"கெட்டிக்காறன் நல்லாப் படம கீறியிருக்கிறீங்க... சிரித்தபடி படத்தை என்னிடம் தந்தார். நான் படத்தை ஒரு முறை பார்த்தேன் மனதிற்குள் திக்கென்றது. படம பல விஷயங்களை எனக்கு விளக்கு வது போலிருந்தது. என்றாலும் விளங்காதது போலவும் இருந்தது. சிவதாஸைப் பார்த்தேன் கதிரையில் அமர்ந்து நான் படத்தைப் பார்ப் பதையே பார்த்துக் கொண்டிருந் தார்.




"இது சிவதாஸ் கீறின படம்... நல்ல வடிவான படம்.... எண்டா லும் எனக்கு இந்தப் படத்தைப பற்றிக் கொஞ்சம் விளங்கப்படுத்தினால் நல்லா இருக்கும்...."

எழுந்து எனக்கருகில் வந்தார். தானும் சிறிது நேரம் படத்தைப் பார்த்தபடி இருந்தார்.

"இது உங்கடை வீடா?"

"எங்கடை வீடுதான் கனவிலை இப்பிடித்தான் வந்தது"

"அப்படியா? நீங்க கனவு கண்டிருக் கிறீங்க. அது மனதிலை நல்லாப் பதிஞசிட்டுது. அந்தக் காட்சியைத் தான் இப்ப படமாகக் கீறி இருக் கிறீங்க....."

மீண்டும் மயான அமைதி

"அந்தக் கனவு ஒரு பயங்கர மான கனவு போலை இருக்கிறது. அதைப் பற்றி எனக்கு கொஞ்சம் சொல்லுவீங்களா?"

படத்தில் குறிப்பிட்ட ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டி "இதுதான் அம்மா" என்றார். சீலை உடுத்த அந்த உருவத்தைச் சுற்றிச் சிவப்பு நிறக் கோடுகள் கூடு போல வரையப்பட்டி ருந்தன. எடுத்த எடுப்பில்ப் பார்ததால அந்த உருவம் எரிவது போல இருந்தது படம்.

"இது அம்மாவா? சரி.... அவவுக்குப் பக்கத்திலை நிக் கிறது?"

"நானும் தம்பியும்......."

"அங்காலை தள்ளி நிக் கிறது....?"

"அதுதான் அப்பா...."

"அவர் கையிலை ஏதோ வைச்சிருக்கிறார்....."

"நெருப்பெட்டி......"

"படத்தின்ரை அந்த மூலை யிலை வேறை இரண்டு பேரைக் கீறியிருக்கிறீங்க?"

"அது பக்கத்து வீட்டுக் காரர்......"

"விளங்குவது. நீங்கள் கண்ட பயங்கரமான கனவைத்தான் இந்தப் படத்திலை கீறி இருக்கிறீங் கள்......."

மெதுவாகத் தலை அசைத் தார்.

"கனவு கண்ட நேரம் உங்க ளுக்குச் சரியான பயமா இருந் தது........"

"ஓம்... அம்மாவை அப்பா நெருப்பாலை எரிக்கிற மாதிரிக் கனவு நெடுக வரும். நான் திடுக் கிட்டு முழிச்சுப் பாப்பன் எனக்குச் சரியான பயமா இருக்கும் உடம் பெல்லாம் நடுங்கும்....."

"உண்மையிலையும் அம்மாவுக்கு அப்பாவாலை ஏதும் கரைச்சல் வரலாம் எண்டு பயப்பிடு றீங்க......"

"அவர் ஒரு நாள் அம்மா வோடை சண்டை பிடிச்சுக் கொண்டு, வீட்டிலை கிடந்த அம்மாவின்ரை உடுப்புகள், கடதாசியள் எல்லாம் போட்டுக் கொழுத்தினவர்"

"அது உங்களுக்குச் சரியான பயத்தைத் தந்தது"

"அம்மாவும் செத்துப் போடுவா வோ எண்டு எனக்குப் பயம்......"

"அப்பா உங்களை விட்டிட்டுப் போட்டார். சில வேளை அம்மாவுக் கும் ஏதும் நடந்திடுமோ எண்டு சரியாப் பயப்பிடுறீங்க......"

"பள்ளிக்கூடம் போனாலும் எனக்கு அம்மாவின்ரை நினைவு வந்திடும்....."

"அதனாலை நீங்க பள்ளிக் கூடம் போறதும் குறைஞ்சிட் டுது....."

"ஓம்..." என்று மெலிதாகத் தலை அசைத்தார். "பள்ளிக் கூடம ஒழுங்காப் போகாத தாலை..... பாடங்களிலை தேர்ச்சி மட்டத்தை அடைய ஏலாமல் இருக்கு...."

"ஓம்...."

"நாளைக்கு அம்மாவை ஒருக்கா வந்து என்னோடை கதைக்கச சொல் லுறீங்களா?...."

"ஓம்........"

⁂ ⁂ ⁂

வான் விளிம்பின் ஓரம் ஒரு பட்சி பறந்து செல்கிறது. ஒருவன் திடீரென்று வந்தான்.

"தம்பி ஊர்வலம் இதாலை வரேக்கை கொஞ்சம் பூ எடுத்துத் தூவி விடுங்கோ....." என்று என் மகனிடம் சொன்னான். அப்படியே ஒவ்வொரு வீட்டு வாசலிலும் ஏதோ சொல்லிக் கொண்டு போனான்.

"நடந்து நடந்தே அவனுடைய கால்கள் உயரமாய் வளர்ந்து விட்டன" என்று நினைத்தேன்.

ஊரடங்குச் சட்ட உறைப்பால வெறிச் சோடிப் போயிருந்த தெரு வில் இப்போது காணப்பட்ட சில பையன்கள் தோரணம் கட்டிக் கொண்டிருந்தனர்.

தோரணம் கட்டுவதற்கு அவர்கள் பழைய 'ரேப்' நாடாக் களைப் பயன்படுத்தினர் என்பது, சீனியும், மண்ணெய்யும், தீப்பெட்டி யும் மட்டுமல்ல... கயிறும் கூடக் கிடையாமல் போய்விட்ட தொண் ணூறுகளின் அவலத்தைச் சுட்டி யது.

"பாண்ட்" வாத்தியம் முழங்க ஆரம்பித்த போது, உடல் ஒரு முறை உதறி ஓய்ந்தது. இதயம் சில்....ல்....ல்... என்றிருந்தது.

தனது நண்பர்களின் நிலையை விட்டுத் தனித்து முன்னே சென்று, எதிரியை நிலை குலைய வைக்க வேளை, வானத்தில் இருந்து ஹெலியால் சுடப்பட்ட வீரன் ஒருவனின் பூதவுடல் இன்னும் சில நிமிடங்களில் இப்பாதையால் வர இருக்கிறது.

"அம்மா.... என்ன பூ அம்மா

**கோகிலா மகேந்திரன்**

போட வேணும்?" மகன் தனக்கிடப் பட்ட பாணியில் ஆர்வமானான்.

"சுவாமிக்குப் போடுற பூ எதுகும போடலாம் ராசா...."

எவர் சில்வர் தட்டைத் தூக்கிக் கொண்டு போய் நித்திய கல்யாணிப பூக்களை அவன் பிடுங்கத் தயா ரான போது,

"குடு.... குடு..... குடு.... குடு குடு...." யமனின் வருகையை அறிவிப் பது போலச் சத்தம் எழுப்பிக் கொண்டு வானத்தில் ஒரு ஹெலி.

"தம்பி றோட்டிலை ஆக்களைக் கண்டிட்டுச் சுடப்போறான். பங் கருக்குப் போங்கோ...." வானத் திலிருந்து அமுலுக்கு வரும் ஊரடங் கிற்கு நாங்கள் பயந்தான்.

மார் முட்டி நிற்கும் குருவி ஒன்று மாமரத்தில் உட்கார்ந்து "கிக்கிக்.... கிக்கிக்கீ...." என்று கத்துகிறது.

அது ஹெலிக்குப் பயப்படாமலே வீரனுக்கு அஞ்சலி செலுத்தத் தயாராகும் நிலை என் மனதில் வெட்கத்தை ஏற்படுத்துகிறது.

## வெள்ளி முற்றம்

நேரம் மாலை ஐந்து மணி என்பதை உணர்த்தும் வகையில்.... வ்வானத்தின் செம்மைப் பிரதேசம் என்று அப்படியே பூமியில் பூத்திருக் கிறது.

பங்கருக்குள் இருந்த போதும் காதுகள் விரிந்தே இருந்தன. ஊர்வலம் அண்மித்து வருவதை 'பாண்ட்' வாத்திய ஒலியின் அதிகரித்த உரப்பு உணர்த்து கிறது.

மாவிலைகளின் நடுவே "கண் ணாரே கடையாரே" விளையாடும் மாங்காய்களும் எட்டி ஊர்வலம் பார்க்கின்றன.

முதலில் மெதுவாய் நகர்ந்து வரும் மாட்டு வண்டி! வாகனமாய் வருவதற்கு டீசல் எங்கே உண்டு?

மாட்டு வண்டியில் பூட்டப்பட்ட ஒலி பெருக்கியில் ஒரு கவிதை... உணர்வு நிறைந்த குரலில் உள்ளத்தைச் சுண்டி இழுக்கிறது.

"இரத்தம் சிந்திய மண்ணில் உயிரை உருக்கி வார்த்தவன் இனத்தின் முதுகில் ஏறிய கால் களை எரித்திட நெய்யாய் ஆன வன்...."

அவன் கொடி போர்த்த போர்வை யில் மலர்ப் படுக்கையில் படுத்து... மெதுவாய் வந்து கொண்டிருந் தான்.

முள் நிறைந்த பாதையில் துணிந்து சுவடு பதித்தவர்களை நினைத்துத் தொங்கிய முகங்களு டன் சீருடை அணிந்தவர்களின் அணிவகுப்பு.

அவனது கனவுக் கொடியை உலர விடோம் என்று கங்கணம் கட்டி எழுப்பும் முரசுகளின் ஓசை.

எரிகின்ற அடுப்பொன்றை இதயத்தில் சுமந்து திரிந்த வீரன் அவனது உடல் மட்டுந்தான் இன்னும் சில பொழுதுகளில் எரிக்கப் படும் உணர்வுகள்?

அக்கம் பக்கத்து வேலிகளில் எல்லாம் தலைகள் முளைக்கத் தொடங்கின.

ஒவ்வொரு படலையும் போலவே எங்கள் படலையும் பூச் சொரிந் தது.

"ஏன் தம்பி... வண்டிலுக்கு மேலை உயரமா ஏறிஞசிருக்கலாமே? வடி வாயிருக்கும்?" நான் கேட்டேன்.

"அந்த முகத்தைப் பார்க்க... எனக்கு முகத்திலையே பூப்போட்டுக கும்பிட வேணும் போலை இருந் தது..."

மகன் சொன்னான்.

மீண்டும் மேலே வான ஊர்திகள் ஊர்வலம் போகின்றன. இம்முறை எட்டு 'பொம்மர்கள்' வழிகாட்டும ஹெலி ஒன்றுடன்! மேல் ஊர்வலம் கீழ் ஊர்வலத்தை எந்த வகை யிலும் பாதிக்கவில்லை.

எம்மை எல்லாம் மௌனமாய்ப் பாதித்தவன் போய் மறையச் சூரியனும் மறைந்து போனான்.

நடு இரவில் கண் விழித்தேன்.

குடும்பத்தின் அகச் சூழல் ஊர்வலம், நாட்டின் புறச்சுழல் ஊர்வலத்தைப் பாதித்திருந்தது. காலையில் சீர்மியரிடம்சென்று வந்த மகனைப் படுக்கையில் காணவில்லை.

மகனுக்கு வயது ஏழு!

# தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் இழுத்தடிப்பு

# வடகிழக்கில்கல்வித் தரத்தைச் சீரழிக்கும் சதி முயற்சி

## மாவை எம்.பி பிரதமருக்கு காட்டமான கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாணத்தில்



ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தின் விபரம் வருமாறு, இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற நம்பிக்கை தருகின்ற சூழ்நிலையை பயன்படுத்தி, நாட்டை அழுத்திக் கொண்டிருக்கின்ற மக்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீங்கள் எடுத்துவருகின்ற நேர்மை யான நடவடிக்கைகளை இலங்கை மக்கள் யாவரும் மிகவும் பாராட்டு கிறார்கள்.

ஆகவே முன்னைய ஆட்சிக் காலத்தில் வடகிழக்கில் பின்நோக்கிச சென்ற கல்விச் கட்டமைப்பை திருத்தி அமைக்குமாறு தங்களை கேட் பதற்கு நல்ல சந்தர்ப்பம் இதுவென உணரப்படுகின்றது.

வடகிழக்கில் ஆசிரியருக்கு மிகுந்த பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கடந்த இரு தசாப்தங்களாக 10 ஆயிரத்திற்கும் மேலாக வெற் றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன.

அதேநேரத்தில் கிட்டத்தட்ட அதே அளவான ஆசிரியர்கள் தென் பகுதியில் மேலதிகமாக உள்ளனர். ஆகவே வடக்கு கிழக்கில பின்நோக்கிச் சென்றுள்ள கல்வி நிலையை மேம் படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

இரு வருடங்களுக்குமுன் வடக்கிழும் கிழக்கிலும் 3 ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு, மந்திரி சபையின் அனுமதியும் பெறப்பட்டது.

ஆனால் திறைசேரியில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படததால் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு இன்னமும் நியமனம் வழங்கப்பட வில்லை.

ஆசிரியர்கள் ஓய்வு பெறவதாலும், வேலையை விட்டுச் செல்வதாலும மற்றும் இறப்பு போன்ற காரணங்களா லும் ஆயிரத்து 500லிருந்து ஆயிரத்து 800 வரை ஆண்டு தோறும் வெற்றிடங்கள் ஏற்படுகின்றன.

இந்த வெற்றிடங்கள் யாரும் கேட்காமலே காலத்திற்காலம் நிரப்படவேண்டும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

எமது கல்வி நிலை மோசமாகிச செல்கிறது என்பதை மிகுந்த ஏமாற் றத்தோடு எடுத்துச் சொல்லவேண்டி யுள்ளது.

நடந்து கொண்டிருக்கும் நிகழ்வு களை பார்க்கின்ற பொழுது, வடகிழக் கின் கௌரமான கல்வித் தராதரத்தை அழிப்பதற்கு எடுக்கப்படுகின்ற திட்டமிட்ட சதியோ என்ற அபிப்பிரா யத்திற்கு வருவது தவிர்க்கமுடியாததா கின்றது.

இந்தச் சூழ்நிலையில் இந்த முக்கிய விடையத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கதைத்து உடனடி யாக ஒழுங்குகளை மேற்கொண்டு முன்னுரிமைகளுக்கு தொண்ட ராசிரியர்களுக்கு நியமனம் வழங்கும்படி கேட்டுக்கொள் கின்றேன் என்று குறிப்பிடப்பட் டுள்ளது. (உ)

## விளையாட்டுப் போட்டி

(கரவெட்டி)

யா/கட்டைவேலி யார்க்கரு விநயாகர் வித்தியாலய இல்ல மெய் வலலுநர் போட்டி நாளை சனிக்கிழமை பி.ப 2மணிக்கு அதிபர் வ. கணபதிப் பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், முதன்மை விருந்தி னராக முன்னாள் மொழித்திணைக் கள உதவி ஆணையாளரும், யாழ். பல் கலைக்கழக வருகை விரிவுரையாளரு மான வ. சிவராஜசிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க. அம்பலவாணர், தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பாளர் எஸ். அரவிந்தன ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-33)

## மகளிர்தின விழா

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி அரியாலை வடமேற்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால நடாத்துப்படும்மகளிர் தின விழா நாளை சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலையத்தில் திருமதி செ. சகுந்த லாதேவதலைமையில்நடைபெறவுள்ளது.

இவ்விழாவில், பிரதம அதிதியாக திருமதி சரோஜா சிவச்சந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (உ)

# தீவிரமான தெய்வீக பக்தி மேலோங்கினால் வேற்றுமை,வெறுப்புணர்வுகள் தூரவிலகி விடும்

வெள்ளி நற்சிந்தனை

சமூகஜோதி
கா. கணேசதாசன்

புயற்காற்று அடிக்கும்போது அரச மரம் இன்னது, ஆலமரம் இன்னது என்று வித்தியாசம் கண்டு பிடிக்க முடியாது. அதுபோலவே பக்தி என்னும் புயற்காற்று ஒருவனுக்குள் அடிக்கும்போது அவனிடம் ஜாதிபேதம் இருக்க முடியாது என்று பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் உபதேசித்துள்ளார்.

ஆம் புயற்காற்று சுழன்றடிக்கும் போது இன்னின்ன மரங்கள் புயலில் சிக்கி ஆட்டம் காண்கின்றன என்று எவராலும் கணித்துக் கூறமுடியுமா? முடியாது. அது போன்ற எல்லாம் வல்ல,எங்கும் நிறைந்த இறைவன் மீது உண்மையான பக்தி கொண்டவனுக்கு உலகிலுள்ள சகலதுமே இறைவனின் படைப்புக்களே என்று தெளிந்த அறிவு மேலோங்கி நிற்கும்.

### வேற்றுமை தெரியாது

சாதி,சமய,இன, நாட்டு, நிறபேதங்கள் எதுவும் தோன்றாது. ல்லாமே இறைவனின் படைப்புக்களே என்ற எண்ணம் இல்லாத தெய்வீக உணர்வு மேலோங்கும் போது வேற்றுமை,வெறுப்பு,பகைமை என்ற தீய எண்ணங்கள் தூர விலகி விடும்.

அவன் என்னவன்,அவன் அந்நியன் என்ற எண்ணம் இல்லாத தெய்வீக உணர்வு மேலோங்கி நிற்கும். அன்பு என்னும் உயர் பண்பால் உலகத்தை நேசிக்கும் மாண்பு மிகுந்து விடும்.இந்து சமயத்தின் அடிப்படைத் தத்துவமே அதுதான்.

இந்து சமயத்தின் அடிப்படைத் தத்துவத்தால் உலகை ஒரே குடும் பமாக ஒரே இறைவனின் படைப்பாக தெளிவுற அறிந்த ஞானி இராமகிருஷ்ண பரம ஹம்சர் கூறிய அருளுரை பேதலித்து நிறகும் உலக மக்களுக்கு இன்றியமை யாத அறிவுரையாகும.

### இறப்பு நிச்சயம்

பகதி என்பது உலகை ப்படைத்து, காத்து, அழித்து,அருளி, மறைக்கும் எல்லாம் வல்ல இறைவன் மேல் கொள்வது. எம்மைப் படைத்த இறை வன் திருவடியை நாம் இறுதியில் அடைந்தே தீரவேண்டும்.

இதற்கு உலகில் எவரும் விதி வலக்கல்ல. பிறப்புண்டேல் இறப்பும் நிச்சயம் உண்டு என்ற உண்மையை உணர்ந்தால் உலகில் பழிபாவங்கள் தடைப்பட்டு விடுமல்லவா? தவளையைக் கவ்வி விழுங்க முனைந்து கொண்டிருக்கின்றது பாம்பு .பாம்பின் வாயில் அகப்பட்டுள்ள தவளையோ தனக்கு நேரவுள்ள முடிவு தெரியாது, தனக்கு முன்னால் பறந்த பூச்சியைக் கவ் விப்பிடிக்கின்றது.

இது போன்றே உலகில் உள்ள மனிதர்களும் ஒவ்வொரு நாளும் மரணததை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதை அறியாது அல்லது கவனிக்காது அவன் எதிரி,அவன்



பகைவன் என்று கூறிக் கொண்டு பாம்பின் வாயில் அடைக்கப்பட்ட தவளை பூச்சியைப் பிடிப்பது போன்று கொலை வெறியாடு கின்றனர்.

ஒருவனைக் கொலை மூலம இறக்க வைத்தவனும் என்றோ ஒரு நாள இறந்து தானே ஆகவேண்டும்.

### தெய்வீக வாழ்வு

இதைக்கூட உணர முடியாத மனிதருக்கு இறைவன் மீது எவ்வாறு பததிவரும்?இது அஞ்சனமன்றி வேறென்ன?பக்தி என்னும் புயற்காறறு உலக மக்கள் மத்தியில் எழுந்தால் இந்த உலகில் பாவச் செயல்கள் இல்லாது பண்பட்ட, தெய்வீக வாழ்வு அல்லவா மலரும்.'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'என்ற முதுமொழியும் ,'யாதும் ஊரே யாவரும் கேளீர்'என்ற நன்மொழியும் எமது சமயத்தின் அடி நாதமாக ஒலிக்கின்றன. உலகமே ஒரு குடும்பம்.உலக மக்கள் யாவரும் ஒரே இறைவனின் குழந்தைகள், சகோதரர்கள் என்ற உன்னத எண்ணம் உலகிலே மலர இராமகிருஷண பரம ஹம்சரின் அருள்வாக்கான பக்தி என்னும் புயற்காற்று உலக மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் வீச வேண்டும்.

எங்கும் நிறைந்தவன் இறைவன் என்று கூறிக் கொண்டு அந்த முழுமையான இறைவனைக் கூறு போட்டு விதண்டாவாதம் பேசுவது பக்தியின் பாற்பட்டதல்ல.எங்கும் நிறைந்த இறைவன் உலகுக்கே பொதுவானவன்.அந்தப் பரம் பொருளிலே உலகிலுள்ள கோடானுகோடி உயிரினங்களும், சடப்பொருட்களும் அடக்கம் என்பது இந்து சமயம் எடுத்தியம்பும் தத்துவமாகும். □

## பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு

(வவுனியா)

கடந்த வருடம் வவுனியாவில் நடைபெற்ற பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வின் முதலாம் ஆண்டு நிறைவு தின நிகழ்வு எதிர் வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வின் ஒருவருட நிறை வாக நினைவுத் தூபிஒன்றும் திறந்து வைக்கப்படவுள்ளது. (த)

## ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் மாதாந்தம் வெளியிடப்படும் ஞானச் சுடர் மலரின் மாசி மாத இதழ் வெளி வந்துள்ளது. (உ-8)

## அலுவலகம் பூட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு -கிழக்கு மின்சார பொறுப்பீட்டுத் திணைக்களத்தின் யாழ்ப்பாணக் கிளை எந்த வித நடவடிக்கைகளும் இன்றி பூட்டப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குருநகர்ப் பகுதியில் மாகாணக் கட்டட நிர்மாணத் திணைக்கள வளாகத்தில் கடந்த ஜனவரி மாதம் 3ஆம் திகதி இந்த அலுவலகம் திறக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது. (உ-4)

# மூவினக் கலைஞர்களும்சங்கமிக்கும் முத்தமிழ் விழா-திருமலையில்

### கலை பண்பாட்டுக்கழகம் ஏற்பாடு

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக்கழகம் இம் மாதம் 20 ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை திருகோணமலை விவேகானந்தா கல்லூரியில் முத்தமிழ் விழாவினை நடத்தவுள்ளது.

இவ்விழாவில் சகல இன மக்களினதும் இயல்,இசை,நாடக படைப்புகள் ஆற்றுகை செய்யப்படவுள்ளன.

இது தொடர்பாக, தமிழீழ விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரததினதுரை கருத்து வெளியிடுகையில்,

இம் முத்தமிழ் விழாவில் நாட்டின் புகழ் பூத்த நாடக முன்னோடி பேராசிரியர் சரத் சந்திராவின் 'மனமே' என்ற வரலாற்றுப் படைப்பும் பேராசிரியர் தர்மஸ்ரீ பண்டார நாயக்காவின் நவன படைப்பான 'ட்றோஜன் மகள்' என்ற நாடகமும் ஆற்றுகை செய்யப்படவுள்ளன.

அத்துடன், பல்கலைக் கழகங்களின் நுண்கலைப்பீட மாணவர்களும் இதில் பங்கு கொள்ளவுள்ளனர்.

தமிழகம் மற்றும் இலங்கையைச் சேர்ந்த தமிழ் அறிஞர்களின் சிறப் புரைகளும் இடம் பெறவுள்ளதாகவும் கூறியுள்ளார். (உ-10)

# தேசிய சரணாலயங்கள் திறந்து விடப்படுகின்றன

(கொழும்பு)

வன விலங்கு பாதுகாப்புத்திணைக்களம் கடந்த இரு தசாப்தங்களாக பூட்டப்பட்டுக் கிடந்த இரு சரணாலயங்களை இம் மாதம் திறந்து விட இருக்கிறது.'யால'தேசிய சரணாலயம் மார்ச் 9ஆம் திகதியும் 'வில்பத்து'சரணாலயம் மார்ச் 16ஆம் திகதியும் மீண்டும் திறக்கப்பட விருப்பதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹேரத் தெரிவித்தார்.

யால தேசிய சரணாலயம் கிழக்கு மாகாணத்தில் தென்கிழக்கு கரையோரமாக, அறுகம் குடாவிற்கு தெற்காக 12கி.மீ தெலைவில் இருக்கிறது.

இது 1985 மே 5ஆம் திகதி மூடப்பட்டது.இதற்கு வெள்ளவாயா-பொத்துவில் வீதியிலிருந்து செலல முடியும்.18ஆயிரத்து 150ஹெக்டேயர் பரப்பில் அமைந்துள்ள இச் சரணாலயம் 1970ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி உருவாக்கப்பட்டது.

வில்பத்து தேசிய சரணாலயம் வடமேல் மாகாணத்துக்கும், வட மத்திய மாகாணத்துக்கும் இடைப்பட்ட எல்லைப்பகுதியில் அனுராதபுர மாவட்டத்தில் மேற்குப் பக்கமாக 13 கி.மீ தூரத்தில்,வடமேல் கரை யோரமாக அமைந்து இருக்கிறது. 1905 ஆம் ஆண்டில் பிரகடனம் செய்யப்பட்ட இப் பகுதி1938 பெப்ரவரி25 ஆம் திகதி தேசிய சரணாலயமாக உருவாக்கப்பட்டிருந்தது.

கடந்த இரு தசாப்தகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக இவையிரண்டும் பூட்டப்பட்டு கண் காணிப்பில் வைக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (உ)

# தேர்ச்சி பெற்ற பயிற்றுநர்கள் யாழ். வீரர்களுக்கு பயிற்சியளிப்பர்

### விளையாட்டுத்துறை அமைச்சின் நிர்வாக இயக்குநர்

(மண்கும்பான்)

தெற்கிலுள்ள வீரர்களைப் போன்று யாழ்ப்பாணத்திலும் பல சிறநத வீர, வீராங்கனைகள் உள்ளனர்.

ஆயினும், அவர்களுக்கு போதிய பயிற்சிகளை வழங்கவோ, ஊக்கப் படுத்தவோ சிறந்த பயிற்றுநர்கள் இல்லாமல் இருக்கின்றமை பெரும் குறைபாடாகும்.

கடந்த செவ்வாய்க்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெற்ற திருக்குடும்ப கன்னியர்மட இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் விளையாட்டுததுறை அமைச்சின் நிர்வாக இயக்குநரான ஏ.ஏ.மில்ரன் அமரசிங்க இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இவ்வாறான நிலையிலும் கூட யாழ்.மாவட்ட வீரர்கள் தெற்கில் இடம் பெற்ற பல போட்டிகளில் பரிசில்களை வென்றது மட்டுமல்லாமல் சில சாதனைகளைக் கூட நிலை நாட்டியுள்ளனர்

போர் இங்கு இல்லாதிருந்திருந்தால் இவர்களின் நிலையே வேறு. எனினும், எமது விளையாட்டுத்துறை அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பின்,வடக்கு -கிழக்கு மாகாணங்களில் உள்ள வீர,வீராங்கனைகளை சிறந்த முறையில் வழி நடத்த தேர்ச்சி பெற்ற பயிற்றுநர்களை அனுப்ப வேண்டுமென தீர்மானித்துள்ளார் என்றார்.

மேலும் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் சமாதான நடவடிக்கைகள் அரசு மற்றம் தமிழீழ விடுதலைப் புலிகளால் சிறப்பாக முன்னெடுத்துச் செல்லப் படும் வேளையில, ஒரு சில தீயசக்திகள் அதனைக் குழப்புவதற்கு முயற்சித்து வருகின்றன.

இதனை இரு தரப்பினரும் மட்டுமன்றி தமிழ்,சிங்கள மக்களும் முற்றுமுழுதாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

அத்துடன், இரு இனங்களின் மொழிகளையும் இருசாராரும் கற்றுத் தெரிந்து கொண்டால் ஒரே நாட்டு மககள் என்ற சகோதர ததுவ மனப்பாங்குடன் பழக முடியும்.

சமாதான முயற்சிகள் நிச்சயம் வெற்றி பெறும் என்பதில் தென்னிலங்கை மக்கள் அனைவரும் நல்ல நம்பிக்கை கொண்டுள்ளனர்.

வருடந்தோறும் தெற்கில் நடை பெறும் தேசிய விளையாட்டுப் போட்டியை இவ் வருடம் யாழில் நடத் துவதென அமைச்சு தீர்மானித்துள் ளது. இப் போட்டிகளுக்கான ஒத்துழைப்பை யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இருந்து எதிர்பார்க்கின்றோம் என்றார்.

அத்துடன், அமைச்சின் கீழ் துரையப்பா விளையாட்டரங்கின் புனரமைப்பு, சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானப் புனரமைப்புக்கென 10 இலட்சம் ரூபாவும், யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட வலைப்பந்தாட்ட ஆடுகளப் புனரமைப்புக்கென 2 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்படும் என உறுதியளித்தார் (உ-55)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மகாஜன வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு பாடசாலை அதிபர் அ.அருந்தவநேசன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தியும், சிறப்பு விருந்தினர்களாக விவசாய நுகாச்சி கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தலைவர் சி.வி. கே. சிவஞானம், வலிகாமம் அரசியற்துறைப்பொறுப்பாளர் சி.தமிழ்மாறன்,கோப்பாய்க் கோட்ட உதவிக கல்விப் பணிப்பாளர் இ.சிவஞான சுந்தரம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

# கல்வியியல் கல்லூரியை விட்டு வெளியேறிய 19 பேருக்கு நியமனம்

(வவுனியா)

வவுனியா கல்வியியற் கல்லூரியில் இருந்து 2002ஆம் ஆண்டு பயற்சியை முடித்துக் கொண்டு வெளியேறியவர்களில்இது வரை நியமனம் வழங்காத 19பேருக்கும் விரைவில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான, நேர்முகப்பரீட்சை எதர்வரும் 10ம் திகதி நடைபெறவுள்ளது.

இதேவேளை,கடந்த ஆண்டில் உடர்கல்விப் பாடநெறி பயிற்சி நெறியை முடித்துக்கொண்டு வெளியேறிய 54 பேரில் 35 பேருக்கு மட்டுமே நியமனங்கள் வழங்கப் பட்டமையும் ஏனைய 19 பேருக்கும் தற்போது நியமனம் வழங்கப்படவுள்ளமையும இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

# யாழ். திறந்தவெளி அரங்கத்தைப் புனரமைப்பதில் அக்கறையில்லை

(குருநகர்)

யாழ்ப்பாணம் திறந்த வெளி அரங்கத்தைப் புனரமைப்பதில் எவரும் அக்கறை காட்டமை குறித்து பொது மக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் கலைவிழாக்கள்,மாநாடுகள்பலவும் இடம் பெற்ற இந்த திறந்தவெளி அரங்கம் இடம் பெற்ற யுத்தம் காரணமாக சேதமடைந்து சோபையிழந்து காணப்படுகிறது.

இதேவேளை,இதற்கு அருகாக இருந்த துரையப்பா விளையாட்டு அரங்கு ,பொதுநூலகம் என்பனவற்றை மீளப் பழைய நிலைக்கு கொண்டு வரும் முயற்சிகள் பூரணப் படுததப்பட்டு வருகின்றது குறிப்பிடத் தக்கது. (உ-74)

# அடையாள வேலை நிறுத்த ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கததின் ஏற்பாட்டில் 11 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து வடக்கு -கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் 11ஆம்திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள ஒரு நாள் அடையாள வேலை நிறுததம் தொடர்பான ஆலோசனைக கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு யா/ வண்ணை நாவலர் மகாவித்தி யாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதல் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சகல கிளைகளினதும் தலைவர் ,செயலாளர், பொருளாளர்களையும்,வலய அமைப்பின் பிரதிநிதிகளையும் மாவட்ட தாய்ச்சங்கப் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு இலங்கைத்தமிழர்ஆசிரியர் சங்க யாழ் மாவட்டச் செயலாளர் த.குமாரசுவாமி கேட்டுள்ளார். (உ)

## இன்னு ஒரு தகவல்

# ஆளுமைக் கோளாறுகள்

ஒருவன் எப்படி நடந்து கொள்கிறான் என்பதை வைத்துத் தான் அந்த ஆள் எப்படி என்பதை முடிவுபண்ணுகிறோம். 'ஆளுமை என்று சொல்கிறோமல்லவா... அதற்குச் சூழ்நிலை களை ஆளுகின்ற தன்மை' என்று விளக்கம் கொடுக்கிறார் ஒரு உளவியல் நிபுணர். சரி... ஒரு மனிதனுடைய ஆளுமையை உருவாக்குகின்ற விஷயங்கள் என்னென்ன? பிறப்பு வளர்க்கப்படுகிற விதம், படிப்பு, நண்பர்கள், சமுதாயம் இப்படி நிறைய உண்டு. ஆளுமையின் அடிப்படையில் சில மனநோய்கள் உண்டாகின்றன. அவை எவை எவை எனத் தெரிந்து வைத்துக் கொண்டோம் என்றால், நம்முடன் இருப்பவர்களை அடையாளம் கண்டுபிடிப்பதற்கு அது மிகவும் உபயோகமாயிருக்கும்.

பரனாய்டு ஆளுமை என்று ஒன்று. இந்தக் கோளாறு உள்ளவர்கள் எப்படி இருப்பார்கள் தெரியுமா? அதிக உணர்ச்சி - சந்தேகம், பொறாமை அதிகமாக இருக்கும். வளைந்து கொடுக்க மாட்டார்கள். மற்றவர்களுடன் இணக்க மான உறவு இருக்காது. அவர்கள் செய்கின்ற தவறுகளுக்கு மற்றவர்களைக் குறைசொல்லிக் கொண்டிருப்பார்கள். இது ஒரு ரகம்.

அடுத்தது. ஸ்கிசாய்டு ஆளுமை. இந்தக் கோளாறு உள்ள வர்கள்... மற்றவர்களுடன் பழகக் கூச்சப்படுகின்றார்கள். சிறு வயதிலேயே இது ஆரம்பமாய் விடுகிறது. பகல் கனவில் சஞ்சரிப்பார்கள். அவர்களுடைய விரோதம், கோபம், ஆகிய வற்றைக் கூட வெளியே காட்டிக்கொள்ளமுடியாமல் இருப்பார் கள். இவர்களுக்கு அகமுகம்: பிரச்சினைகளிலிருந்து ஒதுங்கி... எதிலும் ஈடுபாடு இல்லாதவர்களாக இருப்பார்கள். இப்படி ஒரு ரகம்.

மற்றது, சைக்லோதைமிக் ஆளுமை. உணர்ச்சிகளில் ஏற்றத் தாழ்வுகள் அதிகமாக இருக்கும். சில சமயம் பார்த்தால் மகிழ்ச் சியாக இருப்பார்கள். சில சமயம் சோகமாக உட்கார்ந்த ருப்பார்கள். அவர்களின் மன நிலைக்குத் தகுந்தமாதிரி சமூக நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்வார்கள்.

இன்னொருவகை - எண்ணப் பீடிகை ஆளுமை, இவர் களுக்கு எல்லாம் சரிவர இருக்க வேண்டும். சட்டதிட்டம் எதிலும ஒரு ஒழுங்கு முறை - இப்படி எதிர்பார்க்கிற மனோபாவம். இவர்களின் எதிர்பார்ப்பிற்கும், வரன் முறைக்கும் மற்றவர்கள் கட்டுப்படவேண்டும் என்று நிலைனப்பார்கள். இந்த நிலைமை நீடித்தால் என்ன ஆகும் தெரியுமா? அலைக்கழிக்கிற எண் ணங்கள்... திரும்பத்திரும்ப ஒரே செயலை செய்யத் தூண்டு கிற மனத்தளர்ச்சிக்கு ஆளாகிவிடுவார்கள்.

அடுத்தது - ஹிஸ்டீரியா ஆளுமை. சிறு சிறு விஷயங் களைப் பெரிது படுத்தி நாடகமாக்குகின்ற நடிகர்கள் இவர்கள். உணர்ச்சி அதிகம் உள்ளவர்கள். இவர்களின் மன எழுச்சியின் பக்குவமின்மை. குழந்தைத்தனம். முதிர்ச் சியின்மை எல்லாம் இருக்கும். தன்னலம் மிக்க குணம்! பிறர் தம்மை மட்டுமே கவனிக்க வேண்டும் என்று நினைத்துச் செயல்படுவார்கள்.

இன்னொன்று: வளர்ச்சியற்ற ஆளுமை. மற்றவர்களுடன் இணங்கிப் போகமுடியாதவர்கள். அறிவு, மனவெழுச்சி, சமூக உறவு, ஆகியவற்றிலெல்லாம் போதுமான வளர்ச்சியையும், நிறைவையும் பெறமுடியாதவர்கள். இவர்களால் வாழ்க்கையில் முன்னேற முடியாது. பிச்சைக்காரர்கள்.. குற்றவாளிகள்... இவர்களிடமெல்லாம் இது மாதிரியான ஆளுமை அதிகமாக இருக்குமாம்.

மற்றது, சோர்வுடைய ஆளுமை. எதிலும் உற்சாகம் இல்லாமல் சோர்ந்துபோய் இருப்பார்கள். அதற்கெல்லாம் நமக்கு வலிமை இல்லையப்பா என்று சொல்லிக்கொண்டிருப் பார்கள். சின்ன விஷயங்களுக்கெல்லாம் அதிர்ச்சி அடைவார் கள். வாழ்வின் சுவையை அனுபவிக்க முடியாதவர்கள்.

வேறொருரகம் கொதித்தெழும் ஆளுமை. எதற்கெடுத்தா லும்ஆத்திரம், குரோதம், வன்செயல் என்பவற்றில் ஈடுபாடு உள்ளவர்கள். நத்தைவகை ஆளுமையென்று ஒன்றுண்டு. மற்றவர்கள் மேலே விரோதம் இருக்கும். அடிக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கும் ஆனால் அதை அப்படியே வெளியே காட்டாமல், அதேசமயம் அமைதியான முறையில் வெறுப்பை வெளிக்காட்டுகிற ரகம். இவர்கள் பேசாமல் கம்மென்று இருந்து கொண்டே நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வார்கள்.

முன்ஜாக்கிரதை ஆளுமை ரகம் ஒன்று. பாதுகாப்பின்மை, சந்தேகம், முழுமையின்மை அரைவேக்காட்டுத்தனம் போன்ற மனப்போக்கு அதிகமிருப்பதனால் அகம்பாவம், பிடிவாதம், எச்சரிக்கை எல்லாம் அளவுக்கு மீறி இருக்கும்.

இதுவரையும் நாம் சொல்லிக்கொண்டிருந்த ஆளுமைப் பண்புகள், அளவுக்கு அதிகமாகப் போய்விட்டதென்றால் ஆளுமைக் கோளாறுகள் ஏற்படும் அதன் அடிப்படையில் மனவியாதிகள் வரும். அதனால் இணக்கமான எல்லோரும் விரும்புகின்ற இயல்பான ஆளுமையைப்பெற முயற்சி செய்ய வேண்டும்.

ஒருவர் ஒரு மனோத்துவ டாக்டரைத் தேடிவந்தார். ''டாக்டர்! எனக்கு மனதில் ஏதோவியாதி ஆளுமைக் கோளாறு அதாவது, எனக்குச் சீக்கிரமாகச் செத்துப்போனால் தேவலை என்று தோன்றுகிறது'' என்றார் உடனே அந்த டாக்டர் ''சரி ... அப்படியென்றால்... இங்கேயே இருங்கள் நான வைத்தியம் பார்க்கிறேன்' என்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

## இந்திய மீனவர்களின் அடாத்தான செயல்

# மன்னார் மீனவர்களை சினமடையவைத்துள்ளது

### மன்னார் மாவட்ட மீனவர்சங்கத் தலைவர் விளக்கம்

(கொழும்பு)

நாம் இவ்வளவு காலமும் மனிதாபிமான முறையிலேயே சட்டவிரோதமாக எமது எல்லையில் மீன்பிடித்த தமிழக மீனவர்களை அணுகி அவர்களிற்கு புத்திமதி கூறி அவர்களது இடத்திற்கு அனுப்பி வைத்தோம்.

ஆனால், அவர்கள் எமது அறிவுரைகளையோ எமது இக் கட்டான கஷ்டநிலைமையையோ அறியாது மீண்டும் மீண்டும் கடல் வளத்தை அபகரித்தும்அழித்தும் வருகிறார்கள். இதனாலேயே எமது மீனவர்கள் சினமடைந்து அவர் களை சிறைபிடிக்க முற்பட்டார்கள்.

இவ்வாறு மன்னார் மாவட்ட மீனவர் சங்கத்தலைவர் ஸ்ரொனிஸ் வாஸ் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந் தும் கருத்து வெளியிடுகையில், சட்டவிரோதமாக நுழைந்த மீன வர்களை சிறைப்பிடிக்கும் முயற்சி கைகலப்பாக மாறியதும் தவிர்க்க முடியாததொன்றாகிவிட்டது.

கடந்த கால யுத்தங்களின்போது எமது மக்கள் மிகவும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன், யுத்தகாலத்தில் ஆழ் கடலில் மீன்பிடிக்க முன்னைய அரசினால் தடைவிதிக்கப்பட்டும் இருந்தது.

இந்நிலையில் எமது மீனவர்கள் கடன்பட்டே வலைகள், படகுகளைப பெற்றுத் தற்போது மீன்பிடித்து வருகிறார்கள்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் தமிழக மீனவர்கள் அத்துமீறி எமது பிரதேசத்தில் நுழைந்தது மட்டு மன்றி எமது மீனவர்களின் வலை களைச் சேதமாக்கியுள்ளார்கள்.

அத்துடன் கடலில் உள்ள வளங கள் எல்லாவற்றையும் அபகரித்து செல்வதுடன் கடல் வளத்தை அழித்தும் செல்கிறார்கள்.

இவர்களின் இத்தகைய மனிதாபி மான மற்ற செயல்பற்றி இந்திய உயர் அதிகாரிகள் மற்றும் சம்பந் தப்பட்ட அனைவரிற்கும் அறிவித் திருந்தோம். இந்திய பிரதமரிற்குக் கூட இது பற்றிய கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தோம் எதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார். (உ-10)

## கொழும்பில் தங்கியுள்ள

# தமிழர் விபரங்களைச் சேகரிப்பது

# சமாதான நடவடிக்கையைப் பாதிக்கும்

### சுட்டிக்காட்டி பிரதமர் ரணிலுக்கு கடிதம்

(கொழும்பு)

கொழும்பில் தங்கியுள்ள வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழர்களைப் பதியும் நடவடிக் கையை பொலிஸ்நிலையங்கள் மீள ஆரம்பித்திருப்பது குறித்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் மாவை சேனாதிராஜா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கடிதத்தின் விபரம் வருமாறு,

கொழும்பு பொலிஸ் நிலையங் களில் தமிழர்களைப் பதிவு செய் யும் முறையை மீண்டும் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படு வ தைப் பத்திரிகையில் பார்த்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகிறேன்.

இந்த நடவடிக்கையானது தமிழ் சமூகத்தை மிகவும் பாதிக்கின்ற மிகுந்த சிரமங்களை ஏற்படுத்தும் விடயம் என்பதால், இதனால் ஏற்படக்கூடிய எதிர்விளைவுகளைத் தடுப்பதற்காக, இந்தப் பாகுபாடான நடவடிக்கையை விசாரணை செய்து தடுத்து நிறுத்துமாறு தங்கள் உடனடிக கவனத் துக்கு கொண்டுவரவேண்டி ஏற்பட் டுள்ளது.

யுத்தநிறுத்தம் ஏற்பட்டு புரிந் துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதன பின், மக்களால் குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு கசப்பான அனுபவங் களைத் தந்த இதுபோன்ற பாகுபா டான நடைமுறை இல்லாமல் போனதால் மக்கள் வடக்கிலிருந்து தெற்கிற்கும் அதேபோல் தெற்கிலிருந்து வடக்குக் கும் சுதந்திரமாக, பயமின்றி அமைதி யாகச் சென்று வரக்கூடியதாக இருந்தது.

மீண்டும்பொலிஸ் நிலையங்களில பதியும் முறையை மீள அறிமுகம் செய்தலானது, முன்பு அனுபவித் தது போல் தமிழ் சமூகத்தைப் பாது காப்புப்படையினருடைய கைகளில் அடிமைகளாக்கும் என்பதால், அவர் களுக்கு நிச்சயமாக மிகுந்த அதிருப தியை உண்டாக்குவதுடன் கடுமை யான எதிர்ப்பையும் சம்பாதிக்கும்.

இந்நடவடிக்கையானது, நடை பெற்றுக்கொண்டிருக்கின்ற சமா தானச் செயற்பாட்டிலும் ஏற்பட்டிருக் கின்ற அமைதியான சூழ்நிலையி லும் எதிர்விளைவை ஏற்படுத்தும்.

தமிழர்களை மற்றவர்களிட மிருந்து வேறுபடுத்தி, அவர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கணிக்கும் இந்நடவடிக்கையானது முழுமையான மனித உரிமைமீற லும் அடிப்படை அரசியல் உரிமையை மறுப்பதுமாகும்.

ஆகவே தாங்கள் இந்த விடயத் தில் தலையிட்டுத் தேவையான விசாரணைகளை மேற்கொண்டு இந்த நடவடிக்கை உடனடியாக நிறுத் தப்படுவதை உறுதி செய்யுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கிறேன் என்றுள்ளது. (உ)

## இராசி பலன்

**07.03.2003**

**(மாசி 23, வெள்ளி)**

| | |
|---|---|
| சதுர்த்தி | பி.ப 3.26 வரை |
| அச்சுவினி | மு.இ 8.58 வரை |
| இராகுகாலம் | 10.55- 12.25 |
| சுபநேரம் | 6.25 - 7.55 |

**அமிர்தசித்தம், சதுர்த்தி விரதம்**

**மேடம்**
பெரியோர் சந்திப்பு, போசனநன்மை, புதியபொருள் சேர்க்கை, சந்தோசம்.

**இடபம்**
மனக்கவலை, சரீரபீடை, பொருள் விரயம், காரியதாமதம்.

**மிதுனம்**
ஆனந்தம், தனலாபம், சினேகிதர் நல்வரவு, கருமங்கள் நிறைவேறும்.

**கடகம்**
இஷ்டசித்தி, ஆரோக்கியம், தெய்வ தரிசனம், நல்லசெய்தி.

**சிங்கம்**
நிர்ப்பந்திக்கப்படல், சத்துருபீடை, உத்தி யோக பங்கம், பிரயாணம்.

**கன்னி**
உடல்வியாதி, வாகனபயம், எதிர்பாராத பிரச்சினை, பொருள் விரயம்.

**துலாம்**
தேகசௌக்கியம், பொருள்லாபம், கீர்த்தி, கலந்துரையாடல்.

**விருச்சிகம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக் கியம். செய்தொழில் விருத்தி, தெய்வதரிசனம்.

**தனுசு**
காரிய தாமதம், ஆரோக்கியக்குறைவு, கற்பனைமிகுதி, குடும்பக்கவலை.

**மகரம்**
மனச்சஞ்சலம், காரியதாமதம், நண்பர்கள் சந்திப்பு, போசனசுகம்.

**கும்பம்**
நற்கீர்த்தி, மனோதைரியம், போசனசுகம், கூட்டுமுயற்சி.

**மீனம்**
அதிகசெலவு, மனோசங்கடம், காரிய தாமதம், பொருள் விரயம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

### நோர்வே அமைச்சர்கள்

# பிரதமரைச் சந்தித்தபின்

# பிரபாவைச் சந்திப்பர்

### அமைச்சர் பீரிஸ் தகவல்

(கொழும்பு)



அடுத்த வார மளவில் இலங்கை க்கு வெளி நாடுகளில் இருந்து விசேட அதி திகள் வரவுள் ளதாக அமைச சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர், ஜான்.பீற்றர்சன் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர், விடார்ஹெல கிசன் மற்றும் கனேடிய வெளி விவகார அமைச்சர் ஆகியோரே இலங்கை வரவுள்ளனர்.

நேற்று நடைபெற்ற அமைச் சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அமைச்சர் பீரிஸ் இதனைத் தெரி வித்தார்.

இது தொடர்பாக அவர் அங்கு தொடர்ந்து கருத்து வெளியிடுகை யில், அடுத்த வாரமளவில் இலங்கை வரவுள்ள இவர்கள் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒழுங்காக அமுல் படுத் தப் படுகிறதா என்பதை ஆராய் வார்கள்.

அத்துடன், எதிர்காலத்தில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு மேற்கொள்ளும் முடிவுகளை உடனடி யாக அமுல் செய்வது பற்றி தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதி களுடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்துவார்கள் எனக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜூன் மாதம் ஜப்பானில் ரோக்கியோ நகரில் நடைபெறும் நிதி வழக்கும் மாநாட்டில் இலங்கைக்கு பெருமளவு நிதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிதியில் அடிப்படைவசதி களை ஏற்படுத்தப் பெருமளவு நிதி வழங்கப்படும் எனவும் அவர் குறிப் பிட்டார்.

அதேவேளை இலங்கை வரும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் மற்றும் நோர்வே அமைச்சர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை எதிர்வரும் புதன்கிழமை சந்திப்பார் எனவும் கூறினார். (உ-10)

# சைவப்புலவர்கள் எழுச்சி விழா

# ஏப்ரலில் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்க ஏற்பாட்டில் சைவப் புலவர்கள் எழுச்சி விழா ஒன்று எதிர்வரும் ஏப்ரல மாதம் 6ஆம் திகதி யாழ்ப்பாணத் தில் இடம் பெறவுள்ளது.

இதனையொட்டி மேற்படி சங்கத் தில் அங்கத்துவம் பெறும் சைவப் புலவர்களுக்கான, எழுச்சிவிழா முன னோடிக்கூட்டம், எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியால யத்தில் இடம்பெறவுள்ளது.

இதில், எழுச்சி விழாத்தொடர் பான சைவப் புலவர்களின் ஆலோ சனைகள் பெறப்படவுள்ளன. (உ)

எய்தற்கரியது இயைந்தக்கால் அந் நிலையே
செய்தற்கரிய செயல்
—குறள்—

வலம்புரி

## நல்லெண்ண விடுதலை

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த படைச் சிப்பாய் ஒருவரையும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரையும் நல்லெண்ண அடிப்படையில் புலிகளின் தலைவர் பிரபாகரன் விடுதலை செய்துள்ளார்.

நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் சந்தித்தபோதே தலைவர் பிரபாகரன் நல்லெண்ண அடிப்படையில் அவர்கள் இருவரையும் விடுதலை செய்தார்.

தலைவர் பிரபாவினால் நல்லெண்ண அடிப்படையில்கைதிகள் விடுவிக்கப்பட்ட நிகழ்வு இதுவே முதற் தடவையல்ல,இதற்குமுன்னரும்பல தடவைகள் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், இதற்கு கைமாறாக அரசாங்கம் செயற்பட்டதெனக் கூறமுடியாது.தமிழ்க் கைதிகள் சிறைகளில் வாடுகின்ற போது அவர்களை விடுவிப்பதற்கான எந்த நடவடிக்கைகளும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படாத நிலையில் தலைவர் பிரபாகரன் இரண்டு படைக் கைதிகளை விடுதலை செய்திருப்பது சமாதானத்தின் மீது புலிகள் கொண்டுள்ள பற்றுதலை வெளிப்படுத்தியுள்ளது.

அதேவேளை,கண்காணிப்புக்குழுவின் தலைவர் பதவியை ஏற்கவுள்ளவர் தனது பணியை திறம்பட மேற் கொள்வதற்கும் கைதிகளின் விடுதலை சாதகமாக அமைந்துள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம் பெறும் சமாதான முயற்சிகளின் போது அரச படைத்தரப்பிலும் புலிகள் தரப்பிலும் கைதுகள் இடம் பெறுவது சமாதான முயற்சிக்கு ஆரோக்கியமானதாக அமையாது.

நெடுந்தீவில் கடற்புலிகளின் உயிரிழப்பு,திருமலையில்புலிகள் கைது செய்யப்பட்டமை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த அரச படையினர் கைது...

இப்படியே கைதாகும் பட்டியல் நீண்டு செல்கிறது.இத்தகைய போக்குத் தொடருமாயின்-அதிகரிக்குமாயின்-அதன்விளைவு சமாதானத்தையே பாதிக்கும்.இந் நிலையில் புலிகளினால் கைது செய்யப்பட்ட படைச் சிப்பாய் ஒருவரும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் தலைவர் பிரபாகரனின் உத்தரவின் பேரில் விடுதலை செய்யப்பட்டமை சமாதானத்தின் ஒளிக்கீற்றை மேலும் பிரகாசிக்கச் செய்துள்ளதுடன் கண்காணிப்புக்குழுவின் செயற்பாட்டையும் இலகுபடுத்தியுள்ளது.

இத்தகைய சமாதானச் செயற்பாட்டை அரசும் முன்னெடுக்குமாயின் சமாதானக் கனியை எட்டிப்பிடிப்பதில் அதிக கடினம் இருக்கவாய்ப்பில்லாது போகும்.

எனவே சமாதான முயற்சியென்பது, இருதரப்பினதும் விட்டுக்கொடுப்பில் தங்கியுள்ளது.இதில் புலிகள் மட்டுமே விட்டுக் கொடுக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு எவரிடம் இருந்தாலும அது சமாதானத்தை அடைவதற்கு தடையாக அமையும்.

# கலைஞரின் தொல்காப்பியபூங்கா

# நூலின் வெளியீட்டு விழா

### மு.க.அழகிரி அளித்த பேட்டி

தி.மு.க. தலைவரும் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சருமான திரு.மு.கருணாநிதி 'தொல்காப்பியப் பூங்கா' என்ற தலைப்பில் புதிய நூல் ஒன்றை எழுதியிருக்கிறார். இந்த நூலின் இரண்டாவது பதிப்பு வெளியீட்டு விழா மதுரையில் நடைபெற்றது. அந்த விழாவை முன்னின்று நடத்தியவர் மு.க.அழகிரியாவார். அழகிரியைக் கருணாநிதி மேடையில் வைத்தே வெகுவாகப் பாராட்டியுள்ளார். இதனால் கருணாநிதியின் இன்னொரு புதல்வரான மு.க.ஸ்டாலின் தரப்பினர் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

இந்த நிலையில் திரு.மு.க.அழகிரி அளித்துள்ள பேட்டியை இங்கு தருகின்றோம்.

இந்த விழாவுக்குப் பின் முரசொலியிலும் அழகிரிக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டது.

❋ தேர்தல் களமானாலும், தொல்காப்பிய விழாவானாலும் ஏற்பாடு பண்ணி அசத்துகிறீர்களே... எங்கிருந்து கிடைத்த அனுபவம் இது...?

❋ தலைவரிடத்திலிருந்து தான் கற்றுக் கொண்டேன். பூம்புகார் எழுப்பியது, வள்ளுவர் கோட்டம், அண்ணா அறிவாலயம் உருவாக்கியது. இப்படி எந்தக் காரியமானாலும் அவரே முன்னின்று நேரடிக் கவனம் செலுத்துவார். தேர்தலின் போது இரவுபகல் பார்க்காமல் அவரே சுற்றிச் சுற்றி வந்து தொண்டர்களைச் சந்தித்து உற்சாகப்படுத்துவார். அதைப்பார்த்துத் தான் தேர்தல் காலத்தில் நானும் பணியாற்றியிருக்கிறேன். 'இது உங்களிடமிருந்து கற்றுக்கொண்ட பாடம்தான்' என்று அவரிடமே சொல்லியிருக்கிறேன்.

❋ தொல்காப்பிய நூல் வெளியீட்டு விழாவை திடீரென்று மதுரையில் ஏன் நடத்தினீர்கள்?

❋ எழுத்தாளர் மன்றம் மூலமாக மதுரையில் விழா நடத்த வேண்டும் என்று வைரமுத்து கேட்டுக்கொண்டார். கருணைதாசனும் என்னோடு பேசினார். உடனே அதற்கான ஏற்பாடுகளைச் செய்தேன். இது இலக்கிய விழா என்பதால் தமிழறிஞர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரிடமும் ஆதரவு கேட்டோம். '2001 க்குப் பிறகு, அதாவது 21 மாதங்கள் கழித்து தலைவர் மதுரை வருவதால் விழாவை மாநாடு மாதிரி நடத்த வேண்டும் என்று கட்சித் தொண்டர்களிடமும் பேசினேன். அவர்களும் விறுவிறுப்பாக வேலை செய்தார்கள். விழாவும் வெற்றிகரமாக அமைந்தது. தலைவரும் பாராட்டினார். வேறு ஏதும் பின்னணி இதில் இல்லை.

❋ தொல்காப்பியப் பூங்கா-நூலுக்கு 500 ரூபாய் என்று விலை நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. அதனால் அந்தப் புத்தகத்தை சாதாரண மக்கள் வாங்கிப் படிக்க முடியாது என்ற விமர்சனம் எழுந்திருக்கிறது. விழாவினை நடத்தியவர் என்ற முறையில் உங்கள் கருத்து என்ன?

❋ இந்த நூலில் எல்லாப் பகுதிகளுமே அருமை. குறைந்த விலைக்கு இந்த நூல் விற்கப்பட வேண்டும் என்பது நல்ல கோரிக்கை தான். மலிவு விலையில் கிடைத்தால் கட்சிக்கு அப்பாற்பட்ட நடுத்தர, ஏழை மக்களுக்கும் அதைப்படிக்கக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும் என்பது உண்மை தான். ஆனால் தலைவர் ஏன் அப்படி விலை நிர்ணயித்தார் என்பது எனக்குத் தெரியாது.



❋ மதுரையில் நீங்கள் திரட்டிக் கொடுத்த பணத்திலிருந்து 10 லட்சம் ரூபாவைக் கட்சிக்குக் கொடுத்திருக்கின்றாரே கலைஞர்?

❋ நீங்கள் என்னைப் பெருமைப் படுத் தியிருக்கிறீர்கள் என்று தலைவரிடத்திலேயே இதுபற்றி நான் சொல்லி விட்டேன். ஆனால் இன்னும் ஒரு லட்சம் சேர்த்து 11 லட்சம் என்று சொல்லியிருந்தால் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்திருப்பேன். காரணம், 1967 இல் விருகம்பாக்கத்தில் தேர்தல் மாநாடு நடந்தது. அப்போது அப்பாவின் பெயரைக் குறிப்பிடாமல் ''சைதாப்பேட்டை 11 லட்சம்'' என்று அண்ணா சொன்னார். ஆனால் அப்பா வசூலித்துக் கொடுத்தது தான் அந்தப் 11 லட்சம். இப்பவும் 11 லட்சம் என்றுஅறிவித்திருந்தால் அதை நினைவு படுத்துகிற மாதிரி எனக்கும் அந்தப் பெருமை கிடைத்திருக்கும்.

❋ உங்கள் தந்தையைப் போல் உங்களுக்கும் இலக்கியத்தில் ஆர்வமுண்டா...?

❋ எனக்கு ஆர்வமில்லை. ஆரம்பத்திலிருந்தே புத்தகங்களை ஆழமாக நான் படிக்கவில்லை. நண்பர்களோடு விளையாட்டுத்தனமாகவே இருந்து விட்டேன். ஆனால் அப்பாவுக்குள்ள கோபம், வேகம் எல்லாமே எனக்கும் உண்டு. அவர் நினைத்ததை என்னால் செய்து கொடுக்க முடியும். ஆனால் எல்லோருமே அவரைப் போல் ஆக முடியாது. தமிழகததில் ஆளுங் கட்சியானாலும், எதிர்க்கட்சியானாலும் அவரை வைத்தே அரசியல் பண்ணுகின்றன.

❋ தென்மாவட்டங்களில் கட்சிப்பொறுப்பைக் கவனிக்கும் பொறுப்பை அழகிரியிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் குரல் எழுகிறதே... அது மாதிரி பொறுப்புக் கொடுத்தால் ஏற்றுக் கொள்வீர்களா....?

❋ பொறுப்பு இல்லாவிட்டாலும் பொறுப்போடு நடந்து கொள்வேன். தேர்தல் நேரத்தில் பொறுப்புக் கொடுத்தார்கள். ''நீதான் கவனித்துக் கொள்ள வேண்டும்'' என்று சொன்னார்கள். நானும் பொறுப்பாகப் பார்த்துக் கொண்டேன். ஆனால் பொறுப்பு இல்லாவிட்டாலும் கூட கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவேன்.

❋ தற்போது நடக்கும் அ.தி.மு.க ஆட்சி பற்றி உங்கள் கருத்து என்ன?

❋ இது ஆட்சியே இல்லை. எல்லாத தரப்பு மக்களிடமும் எதிர்ப்பு அதிகமாகிவிட்டது. தி.மு.க. ஆட்சியில் யார் வேண்டுமானா லும் முதல்வரைச் சந்தித்து கோரிககையைச் சொல்ல முடியும். ஆனால் அது மாதிரி ஜெயலலிதாவை யாரா வது சந்தித்த தாக செய்தி வந்திருக்கிறதா....? பத்திரிக்கையா ளர்களாகிய நீங்களே முதலமைச்சரை அவரது அறைக்குச் சென்று சந்திக்க முடிகிறதா....? மாயாஜாலம் மாதிரிமைக் வருகிறது. வெயிலில் காத்துக் கிடக்கிறீர்கள். முதலமைச்சருக்கு குடைபிடிக்கிறார்கள். பிறகு உங்களையும் சந்திக்காமல் றோட்டில் நிறுத்திவிட்டுப் போய்விடுகிறார்கள். ஆனால் தி.மு.க. தலைவரோ பத்திரிகை யாளர்களைச் சந்திப்பதற்கென்றே அறிவாலயத்தில் ஒரு தனியறையை உருவாக்கியிருக்கிறார்.

இந்த ஆட்சியை மக்களே தூக்கி எறிவார்கள். நாட்டில் பஞ்சம், பட்டினி என்று எத்தனையோ பிரச்சினைகள் இருக்கிறது. ஆனால் ஜெயலலிதா எங்கு போனாலும் அரசு விழா என்கிற போர்வையில் கோடிக்கணக்கான ரூபாவைச் செலவழிக்கிறார்கள். தி.மு.கவை தரம் கெட்டு விமர்சிப்பதையே ஜெயலலிதா குறிக்கோளாகக் கொண்டுள்ளார். சட்ட சபையில் 'கழுதை' என்று சொன்னவார்த்தையை சபைக் குறிபபில் இருந்து நீக்கலாம் என்று சபாநாயகர் கூறிய பிறகும் 'இருக்கட்டும்... கழுதை உழைக்கிற வர்க்கம் தானே?' என்கிறார். இந்த ஆட்சியில் காளிமுத்துவுக்கு அல்ல... சபாநாயகர் என்ற பதவிக்கே மதிப்புக் கிடையாது. கழுதை உழைக்கிற வர்க்கம் என்று சொன்னால், யானை கூட உழைக்கிற வர்க்கம்தான். அதுவும் காட்டில் மரம் சுமக்கிறதே...? (பி)





திசரி தியானம்

### பள்ளிக்கூடம்

இவ்வுலகம் ஒரு பெரிய பள்ளிக்கூடம். இது உன் படிப்புக்காக ஏற்படுத்தப்பட்டது. புத்தியுடன் நடந்துகொள். கிடைக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திக் கொள். கெட்டது ஒன்றும்இல்லை.

பூக்களுடனும், பசும் புல்லுடனும் புன்னகை புரி. செடி, கொடிகளுடன் கைகுலுக்கு. இயற்கையின் எல்லா சிருஷ்டிகளுடனும் நேசம் கொள். நீ சிறந்த பூரணமான வாழ்க்கையை எய்துவாய்.

சுவாமி சிவானந்தர்


## விபத்தில் காயம்

(கரணவாய்)

ஆட்டோ-சைக்கிள் விபத்தில் காயமடைந்தவர் மந்திகை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்களன்று கரணவாய் அண்ணா சிலையடிப்பகுதியில் நடந்த இவ்விபத்தில் சைக்கிளில் சென்றவரான கரணவாய் தெற்கு பட்டாந்தோட்டையைச் சேர்ந்த கரவெட்டி அம்பம் ஆஸ்பத்திரி சிற்றூழியரான சி.மயில்வாகனம் (வயது 52) என்பவரே காயமடைந்தவராவார். (உ-29)

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் வாராந்த நிகழ்வுகளில், இன்று வெள்ளிக் கிழமை காலை 10.30 மணிக்கு நல்லை ஆதீன ஓதுவார் சி.தில்லை மணியின் பண்ணிசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது. (உ-8)

## கசிப்பு வேட்டை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் இருவேறு இடங்களில் நேற்று இடம்பெற்ற கசிப்பு வேட்டையில் கசிப்பு மற்றும் அதனை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப் படும் பெருமளவு பொருட்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

யாழ். பிரதான வீதிப் பகுதியில் 2 போத்தல் கசிப்பு, 238 போத்தல் கோடா மற்றும் வடிகட்டும் உபகரணங்களையும், வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்திற்கு அருகாமையில் 2 போத்தல் கசிப்பையும் கைப்பற்றி யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளனர். (உ-4)

## ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இரண்டாம் உலக இந்து மாநாடு தொடர்பாக அமைக்கப்பட்ட யாழ். பிராந்தியக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறை விரிவுரை மண்டபத்தில் கலைப்பீடாதிபதி கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறவுள்ளது.

மாநாடு தொடர்பாக பல முக்கியமான விடயங்கள் ஆலோசிக்கப்பட இருப்பதால் பிராந்தியக் குழுவில் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர்களை தவறாது இதில் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கி மாநாடு சிறப்புற உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

# மக்கள் வங்கியின் பரிசளிப்பு நாளை

(யாழ்ப்பாணம்)

2002ம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் திகதி நடைபெற்ற ஜெயஸ்ரீ பரிசுத்திட்டத்தில் பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளுக்கும்,வனிதா வாசனா 2002பரிசுத்திட்டத்தில் பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளுக்குமான பரிசுகள் அந்தந்தக் கிளைகளில் வைத்து நாளை8ம் திகதி வழங்கப்படுமென மக்கள் வங்கியின் யாழ்.பிரதேச முகாமையாளர் அறிவித்துள்ளார்.பரிசில் பெற்றவர்களின் விபரம்:

ஜெயஸ்ரீ 3-தங்கக் காசு பரிசு-ஒக்டோபர்-2002.

யாழ்.பிரதானவீதி கிளை-பீவிஜ்ரா், திருமதி.சுவங்கினி.அச்சுவேலி-எஸ்.சிவபாதலிங்கம்,எஸ்.தனபாலசிங்கம்.சுன்னாகம்-செல்வீ ரி.கணேசானந்தன்.சாவகச்சேரி-எஸ்.முத்துலிங்கம்,திருமதி ரூபராணி.சுன்னாகம-சி.ஜெயசுந்தரம்,ரி.ஜெயநாதன்,திருமதி ஜெயநாதன்.

யாழ்.பிரதான வீதி-திருமதி எம்.நவரெட்ணம்.சங்கானை-எம்.கே.கந்தசாமி,சுன்னாகம்-ரி.ஜெயநாதன்.

யாழ்.பிரதான வீதி-எஸ்.வி.முருகேசு.ஊர்காவற்துறை-எ.தியாகராசா,யாழ்.பிரதான வீதி-ஆர்.யோகேந்திரன்,திருமதி எம்.ராசமணி,கன்னாதிட்டி-எம்.ஈ.தியாகராசா

ஜெயஸ்ரீ 3-தங்கக் காசு பரிசு-நவம்பர்-2002.

யாழ்.ஸ்ரான்லி வீதி கிளை-பி.நலலதம்பி,பருத்தித்துறை-எஸ்.செல்வதீஸன்.சங்கானை-பி.திலீபன்,புஷ்பா,எம்.எஸ்.தெயவேந்திரன்.காங்கேசன்துறை-வீ.நடராசா,திருமதி அன்னலட்சுமி,எ.சுப்பிரமணியம்,யாழ்.பல்கலைக்கழகம்.என்.குருக்கள்,திருமதி எஸ்.சர்மா.கன்னாதிட்டி-கே.சுப்பிரமணியம்,அச்சுவேலி-செல்வி கே.ரயணி

ஜெயஸ்ரீ 3-தங்கக் காசு பரிசு-டிசம்பர்-2002.

கன்னாதிட்டி-எஸ்.ரோமியவரன சாவகச்சேரி-ரி.வேலுப்பிள்ளை, திருமதி ஏ.திருநாவுக்கரசு,யாழ். ஸ்ரான்லி றோட்-பி.நாகரத்தினம், அச்சுவேலி-தி.தியாகராசா,யாழ். பிரதான வீதி,எஸ்.வீ.முருகேசு, சங்கானை கே.சுவாமிநாதன்,யாழ். ஸ்ரான்லி றோட்-எஸ்.சோமசுந்தரம்,சாவகச்சேரி எஸ்.சுப்பிரமணியம்,யாழ.ஸ்ரான்லி றோட்,ரி.விஜயகுமாரன்,சாவகச்சேரி வி.மகாலிங்கம்.கன்னாதிட்டி-எஸ்.வேல்முருகன்,யாழ்.பிரதான வீதி-செல்வி ஆர்.டயானா,சுனனாகம்வி.மூர்த்தி,திருமதி மூர்த்தி,வி.விநாயகமூர்த்தி,

வனிதா வாசனா-2002
தங்கக காசு பரிசு

சாவகச்சேரி-செல்வி கே.கனகலிங்கம்.யாழ்.பல்கலைக்கழகம்-செல்வி ஐ.அமிர்தலிங்கம்.கன்னாதிட்டி திருமதி ஆர்.இராமச்சந்திரன் காங்கேசன்துறை-செல்வி ஜெ.இரத்தினசிங்கம்,சாவகச்சேரி-செல்வி ஆர்.இராஜதுரை,பருத்தித்துறை-திருமதி பி.யோகராசா,நெல்லியடி திருமதி எஸ்.ஸ்ரீதர்,யாழ்.பல்கலைக்கழகம்-செல்வி எம்.எம்.ஆர்.ஆரோக்கியராணி,செல்வி ரி.ஜெயந்தினி கன்னாதிட்டி-செல்வி ரி.கிருஷ்ணசாமி,திருமதி கே.சுப்பிரமணியம் திருமதி அருட்செல்வி சேகர்,யாழ். பிரதான வீதி திருமதி எஸ்.அன்னப்பிள்ளை,செல்வி ஜி.நாகநந்தினி, அச்சுவேலி-திருமதி கே.சகுந்தலாதேவி,யாழ்.பல்கலைக் கழகம். செல்வி எஸ்.சுப்பிரமணியம்.

# மீனவர்களின் பிரச்சினைகள் பாலாவுடன் ஆராயப்படும்

வடக்குக் கிழக்கு மீனவர்களின் பிரச்சினை குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் இன்று கலந்துரையாடி ஒன்றிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாக ரெலோ அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.கடந்த சில தினங்களாக பேசாலை மற்றும் தலை மன்னார்கடற்பகுதிகளில் இந்திய மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளும் மோதல்களும் தொடர்ந்து நிகழாத வண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைதற்போது ஏற்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி பிரவேசித்து மீன் பிடிப்பதனால் இலங்கை மீனவர்கள் தொழில் வாய்ப்பை இழந்து வருகின்றனர்.

எமது மீனவர்கள் எதிர் கொளளும் பிரச்சினைகளை சர்வதேசத்திற்கும் இந்திய அரசுக்கும் தெளிவுபடுத்துமுகமாக விரைவில் சாத்வீகப் போராட்டம் ஒன்றை நடத்தவிருப்பதாகத் தெரிவித்தார். இதன் மூலம் முடிவு எட்டப்படாவிடின் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தவுளளதாகவும் தெரிவித்தார்.(உ)

## விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் சந்தியில் நேற்று மாலை 6.30மணியளவில் இடம் பெற்ற லொறி-மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கே. சிவபாதம்(40)என்பவரே விபத்தல் காயமடைந்தவராவார்.(த)

## பேடன்பவல் தின விழா

யாழ்.மத்திய கல்லூரியில் சாரணியத் தந்தை பேடன் பவல் தின விழா இன்று பி.ப.1மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இந் நிகழ்விற்கு பரதம விருந்தினராக நல்லூர்ப பிரதேச சபைச்செயலாளர் எஸ்.செல்வரத்தினம் கலந்து கொள்வுள்ளார்.

## களுத்துறை...

குணதலக ஆகியோர் இன்று களுத்துறை சிறைச்சாலைக்கு விஜயம் செய்து உண்ணாவிரதம் இருந்து வரும் கைதிகளை பார்வையிட உள்ளனர்.

இது இவ்வாறு இருக்க, நேற்று உண்ணாவிரதிகளை பார்வையிட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி.அ.விநாயகமூர்த்தி இன்று கிளிநொச்சியில் விடுதலை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்திக்கும் போது களுத்துறைச் சிறையில் உண்ணா விரதம் இருக்கும் கைதிகள் நிலை தொடர்பாகவும் எடுத்துக் கூறுவார். (ம)

## கூட்டுறவு...

கே.உமாபாலன்,ஜெ.குமுதாயினி,ஆர்.ரமணன்,எஸ்.சபேசன்,எஸ்.நிமலன்,ஆர்.சசிகலா,ஜே.விஷ்ணுகரன், கே.சுதர்சினி,ஜி.கஜமுகன்,ரி.ஹேமாவதி,கே.உருத்திரசிங்கம்,வி.கார்த்திகா கே.நிமலன்,ரி.மாலினி,எஸ். கஜாநாதனன்.

அபிவிருத்தி

எஸ்.பாலகுமார்.மே.ஞானச்சந்திரன் எம்.சிவகுமாரன்,கே.நவிதரன்,கே. ஜேயசுதா,எஸ்.கலாதீபன்,கே.நிசாகரன்,ரி.நவநீதன்

பனை தென்னை வள அபிவிருத்தி

எஸ்.குணாளன்,வி.பிரதீஸ்குமாரன், கே.கமலநாதன்,என்.அஜந்தாதேவி, ஏ.தயாளன். (வ)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கொழும்புத்துறை)

இந்து மகா வித்தியாலயத்தின் மெய்வல்லுநர் போட்டிஇன்று பிற்பகல் 2மணிக்கு அதிபர் திருமதி சிவபாலன் வசந்தமாலா தலைமையில் நடை பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் எஸ் செந்தில்நந்தனன் கலந்து கொள்வார். (இ-51)

* * *

(தனங்கிளப்பு)

கொக்குவில ஸ்ரீஇராமகிருஷ்ண வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சிவபாதசேகரம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு முன்னாள் மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.(ந-37)

## வானியல் பாசறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் தரம் 9மாணவர்களுக்கான வகுப்பறைக்கு வெளியான கற்றல் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இன்று வெள்ளிக் கிழமை வானியல் பாசறை நிகழ்வு இடம் பெறவுள்ளது (த)

## புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் இன்று காலை 9மணிக்கு சுவாமி விவேகானந்தரின் புத்தக் கண்காட்சி நடை பெறவுள்ளது.

இந் நிகழவிற்கு ஓய்வு பெற்ற சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் க.மாணிக்கம். பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். ஆசி உரையினை பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா நிகழ்த்துவார்.(இ-5)

## புலிகளுக்கு...

சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஊடகத்துறை அமைச்சின செயலாளர் ஆகியோர் சார்பாக நீதிமன்றில் ஆஜராகவுள்ள சொலிசிற்ற ஜெனரல் தெரிவித்துள்ளார். அத்துடன் .இராஜதந்திர வட்டாரங்கள் இறக்குமதி செய்யும் உபகரணங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படுவது நடைமுறையில் உள்ள விடயமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

## தமிழ்க்....

சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வீ. ஆனந்தசங்கரி கலந்து கொள்ளமாட்டார் எனத் தெரியவருகிறது (உ-10)


இந்திய சாஸ்திரியார் யாழ். வருகை

முதன் முறையாக யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ளார். சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற பரம்பரை ஜோதிடர்

ஓம் சக்தி அருள்வாக்குப் பெற்ற

S.N.குமாரசாமி அவர்கள்



கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும்

- திருமணத் தடையா?
- உயர் கல்வியில் தடையா?
- தொழில் முன்னேற்றம் இன்மையா?
- குழந்தைப் பாக்கியம் இன்மையா?
- புதிய தொழில் ஆரம்பிக்க வேண்டுமா?
- குடும்பத்தில் பிரச்சினையா?
- தீராத வியாதியா?
- வெளிநாடு செல்லத் தடையா?

மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்

(காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்,
இல. 711, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

☞ செவ்வாய் விடுமுறை

[C\5827]



மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் யாழ் பிரதான வீதிக் கிளையிலும், நெல்லியடிக் கிளையிலும்,

31.12.1984 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் பின்வரும் திகதிகளில்

பகிரங்க ஏல விற்பனை

செய்யப்படும்

| கிளைகளின் விபரம் | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் செய்யப்படும் இடம் |
|---|---|---|
| யாழ்.பிரதான வீதிக்கிளை | 15.03.2003 இருந்து 19.03.2003 வரை | யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை |
| நெல்லியடிக் கிளை | 20.03.2003 இருந்து 23.03.2003 வரை | யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை |

"வனிதா வாசனா"-2002 பரிசளிப்பு விழாவும் "ஜெயஸ்ரீ" பரிசளிப்பு விழாவும்

மகளிர் தினமான எதிர்வரும் 8.03.2003 அன்று (சனிக்கிழமை) காலை 9.00மணி - 12:30மணிவரை மக்கள் வங்கியின் அனைத்துக் கிளைகளும் திறந்திருக்கும். அன்று கடந்த வருடம் நடைபெற்ற "ஜெயஸ்ரீ" பரிசுத் திட்டத்தில் பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளுக்கும், "வனிதா வாசனா" - 2002 பரிசுத்திட்டத்தில் பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளுக்கும் பரிசில்கள் அந்தந்தக் கிளைகளில் வைத்து வழங்கப்படும் என்பதை அறியத் தருகிறோம்.

மகளிர் தினமான அன்று ஆரம்பிக்கப்படும் "வனிதா வாசனா"
கணக்குகளுக்கான சீட்டிழுப்பில் வெற்றிபெறுவோரின் வைப்புத் தொகை
இரண்டு மடங்காக அதிகரிக்கப்படும்

மேலும், இக் கணக்கில் ரூபா 10,000/=க்கு மேல் மீதி பேணப்படின், மாதாந்த "ஜெயஸ்ரீ" சீட்டிழுப்பிற்கு தாங்களும் தெரிவு செய்யப்பட்டு அதிஷ்டசாலியாகும் வாய்ப்பு தங்களுக்கும் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரதேச முகாமையாளர் (C/5826)

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம், யாழ்ப்பாணம்


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.03.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.